விலை ரூபா 2-00

12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆடி 28 ஜுல்கஃ 14 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (12—8—84) இதழ் 179

## ஸ்ரீமா கண்டனம்

(கொழும்பு)

வடபகுதியில் இப்போது நடக்கும் சம்பவங்கள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசைக் கண்டித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்குத் தொடர்ச்சியாக கஷ்டங்கள் கொடுக்கப்பட்டு வருவதைக் சுட்டிக் காட்டினர். அவர்கள் பிரச்னையைத் தீர்த்துவைக்க அரசு தவறிவிட்டது என்றும் குற்றஞ்சாட்டினர். நாட்டில் தேர்தல் ஒன்றை வைத்து புதிய அரசின் மூலமே பிரச்னையைதீர்க்கலாம் என்றும் சொன்னர்.

# வடக்கின் நிலைகுறித்து இந்திய அமைச்சரவை ஆராய்ந்தது!

புதுடில்லி

இலங்கையின் வட பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைகுறித்து இந்திய அமைச்சரவை அவசர அவசரமாககூடி நீண்டநேரம் ஆராய்ந்தது.

பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான திருமதி இந்திரா காந்தி தலைமையில் கூடிய அமைச்சரவையின் அரசியல் குழு, இலங்கைச் சம்பவங்கள் குறித்து நீண்டநேரம் விவாதித்த போதிலும் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அனுப்பிவைத்த செய்தி குறித்தும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு எஸ், ஜே. எஸ். சத்வால் இலங்கை ஜனதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள்

(12ம் பக்கம் பார்க்க)

### நேற்றைய யாழ். சம்பவம்

## ஒருவர்பலி! மூவர்படுகாயம்!

(காரியாலய நிருபர்)

யாழ் நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானர், மூவர் படுகாயமுற்றனர்.

யாழ். பிரதான வீதிச்சந்தியில் இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த லோகேஸ்வரன் (34 வயது) என்ற டாக்ஸி சாரதியே பலியானவராவர். இவர் டாக்ஸிக்குள் வைத்தே துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானதாகக் கூறப்படுகிறது.

மற்றும் காயமடைந்தோர் விபரம் வருமாறு:

கே. இமானுவல் (42 வயது) ஆடியபாதம் வீதி நல்லூர், வி. கணேசன் (48 வயது) பீச் ரோட், யாழ்ப்பாணம், டி. யாகூர் (20 வயது) சோனக தெரு, யாழ்ப்பாணம்.

நேற்றுக் காலை யாழ். நகரிலும் மற்றும் சுற்றுடல்களிலும் சனநடமாட்டம் சாதாரணமாக இருந்தது. கடைகள் ஒற்றைக் கதவுகளில் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொதுமக்கள் அங்கலாய்ப்புடனும், பீதியுடனும் அவசரம் அவசரமாக

[12-ம் பக்கம் பார்க்க]

### வடக்கில் நடந்த

## இந்தச் சம்பவங்களுக்கு உரிமை கோருகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வடபகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்களுக்கு தாமே பொறுப்புஎன்று 'தமிழீழ விடுதலை புலிகள்' இயக்கம் சுவரொட்டி மூலம் உரிமை கோரியுள்ளது.

வல்வெட்டித்துறையில் இரு கடற்படை வீரர்கள் மரணமான சம்பவம், ஓட்டிசுட்டான் பொலிஸ் நிலையதாக்குதல், பருத்தித்துறை வீதித் தாக்குதல், வல்வெட்டித்துறை நெடியகாடு தாக்குதல், உதவிப் பொலிஸ் அதிபர் மீதான தாக்குதல் என்பவற்றிற்கு தாமே பொறுப்பு என்று இந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

### கைதான இளைஞர் விவகாரம்

## விடுதலை செய்வதாக அமிரிடமும் உறுதி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் கைதுசெய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை விசாரணையின் பின்னர், இம் மாதம் 16ம் திகதிக்கு முன் விடுதலைசெய்வதாக, வட பகுதி இணைப்பதிகாரியும், இராணுவத் தலைமை அதிகாரியும் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக தமிழர் விடுதலை

(12-ம் பக்கமபார்க்க)

## இரசாயனப் பொருட்களுடன் இரு இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

தமிழ்நாடு தென்பகுதி கரையோரப்பகுதியில் இரு இலங்கைத் தமிழ்இளைஞர்கள் வெடிகுண்டுகள் தயாரிப்பதற்கான இரசாயனப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொலிஸாரே இவ்விருஇளைஞர்களையும் கைது செய்துள்ளனரொன்றும், தற்போது இவர்கள் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இவ்விரு இளைஞர்களும் இலங்கை செல்வதற்கே தயாராகி நின்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (கி)

## இந்தப் பகுதிகளில் சோதனை

(மானிப்பாய்)

நேற்று நூற்றுக்கணக்கான ராணுவத்தினர் உடுவில், மானிப்பாய், சங்குவேலி, சுதுமலை ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் சோதனைமேற் கொண்டனர்.

இந்தப் பகுதிகளில் ராணுவத்தினர் திடீரென ட்ரகுகளிலும், ஜீப்புகளிலும் வந்து இறங்கி இச் சோதனையை நடத்தினர்.

### வல்வை பாதிப்பு

## பல்கலைக்கழக மாணவர் உதவி வழங்கினர்!

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், வல்வெட்டித்துறைப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்களிடமும், கடைகளிலும் பல்கலைக்கழக மாணவர்களால் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களில் ஒரு பகுதி சம்பர்மலை மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் மக்களுக்கும், அச்சுவேலி கதிரிப்பாய் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கும், கொம்மாந்துறைப் பகுதியிலிருக்கும் மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், மேலும் கிராமங்கள்

(12ம் பக்கம் பார்க்க)

### மனித உரிமைகள் கமிட்டி

## இலங்கைபிரச்னைபற்றிஇன்று ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படுவது சம்பந்தமாக ஆலோசிப்பதற்காக ஐ. நா. வின் மனித உரிமைகள் கமிட்டி ஞாயிற்றுக்கிழமை (13ம் திகதி) கூடவிருப்பதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று முன்தினம் தாம் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கூறினர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களும், ராணுவத்தினரும் துன்பம் தருகிறர்கள் என்று மேற்படி கமிட்டிக்

(11ம் பக்கம் பார்க்க)

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்

28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்.

(சலுசலவுக்கு அண்மையில்)

யாழ்ப்பாணம்.

ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE

தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்

அவுஸ்திரேலியா கட்டடம்

த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு

ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE

தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066

(1091)

# விளம்பரம்

### விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் 4பரப்புக்காணியும் வீடும் கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: இ. அருந்தவம் 4ம் கட்டை, ஆனைக்கோட்டை. 1324

மாட்டீன் றோட் ஒழுங்கையில் 1½ பரப்பில் சகல வசதிகளுடனும் வீடு உடன் விற்பனைக்கு. விளம்பர இல:1318, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1318

பேபி பெல்லிங் குக்கர் (Baby Belling Cooker) விற்பனைக்குண்டு, புத்தம் புதியது. ''சுமங்கலி'' கட்டுவன், தெல்லிப்பளை. 1323

மானிப்பாய் மேதர் ஒழுங்கையில் இரண்டே முக்கால் பரப்புக் காணி விற்பனைக்குண்டு என். பத்மராஜா, 42/2, College Lane, நீராவியடி 1303

கமறுக்கள் - றேடியோக்கள்- சகலவித தளபாடங்கள் - கார் சீற்கவர்கள் - அலுமாரிகள்- சைக்கிள்கள் - ICMA புத்தகங்கள் - கடிகாரவகைகள் - இன்னும் அநேக பொருட்கள். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு, ஏல விற்பனை நிலையம், கோப்பாய். (1189)

ஓட்டுமடம் சந்திக்கருகாமையில் நல்ல சுற்றுடலில், 4/1 ஓட்டுமடம் வீதியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S கதிரமலை, 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1316

## அதிர்ஷ்ட எண்சோதிடம்

எழுதியவர்
அன்புஜீ
பலநுட்பமான விடயங்கள் அடங்கியது
கிடைக்குமிடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
1305

ரூ 15லட்சம் செலவில்

## பெரியதம்பண்ணைக் குளம் புனருத்தானம்!

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மாவட்டத்திலுள்ள பெரியதம்பண்ணைக் குளம் உலக வங்கியின் உதவியுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது, இதன் புனருத்தாரண வேலைக்கென 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடம் சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் வாய்க்கால் புனரமைப்பு, வீதி அமைத்தல் என்பன நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் தூர்ந்துபோயிருந்த வாய்க்கால்கள் புதுப்பொலிவுபெறுவதனுல் நூற்று கணக்கானஏக்கர் நெல் வயல்கள் நீர்ப் பாய்ச்சல் வசதிகள் பெறவுள்ளன.

புனருத்தாரண வேலைகள் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வயோதிபர் சடலம் அடையாளம் காணப்பட்டது

(மாவிட்டபுரம்)

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட 60 வயது வயோதிபரின் சடலம் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமான ஒருவர் அவரிடம் இருந்த அடையாள அட்டைமூலம் அடையாளம்காணப்பட்டு வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் உலப்பனையைச் சேர்ந்தவர் என்றும், கறுப்பையா காளிமுத்து என்றும் 60வயது வயோதிபர் என்றும் இவரிடம் ஐம்பது ரூபா பணம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவரது விலாசத்துக்கு தந்தி தகவல் அனுப்பப்பட்டதுடன் காங்கேசன்துறைபொலிசாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவரிடம் சடலத்தை எவரும் கோரவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டது.

வேறு மூன்று நபர்களும் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் தெல்லிப்பழை அரசினர் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உரும்பிராயை சேர்ந்த ஆ.ரவிகுமார், எஸ். குணரத்தினம், யாழ். சென். ஜேம்ஸ் வீதியைச்சேர்ந்த தியாகராசா ராஜதுரை ஆகியோரே இங்கு அனுமதிக்கப்பட்டவராவார்கள்.

## ஏலவிற்பனை

யாழ். அபிவிருத்திச் சபை மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் மானிப்பாய் பொது நூலக பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகள்,வர்த்தமானிகள் 1984-08-15ந் திகதி மு.ப.10 00 மணிக்கு ஏலவிற்பனைசெய்யப்படும். கொள்வனவு செய்பவர் உடன் பணம் செலுத்தி மேற்படி பத்திரிகைகளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

**அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,**
யாழ்.அ.ச.உப-அலுவலகம்,
மானிப்பாய்.

யா.அ.ச.உப-அலுவலகம்,
மானிப்பாய் பட்டினம்,
1207

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெறவிருந்த இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க வருடாந்தக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளது.

தபால் தந்திப்பகுதிகளின் உத்தியோகத்தர்கள் அகில இலங்கைரீதியில் பங்குபற்றும் இவ்வருடாந்தக் கூட்டம் தற்போது யாழ்குடாநாட்டிலும் ஏனைய தமிழ் பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலை காரணமாக காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளது.

## இணைப்பு

(பச்சிலைப்பள்ளி)

பளை கமநலசேவை நிலையத்தின் கீழ் இயங்கிவந்த செம்பியன்பற்று, மருதன்கேணி, முள்ளியான், சுண்டிக்குளம் ஆகியநான்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவுகளும் அம்பன் கமநலசேவை நிலையத்தின் கிழ் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பளை கிளிநொச்சி மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதையடுத்து அம்மாவட்டத்தில் சேராத மேற்குறிப்பிட்ட 4 பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவுகளும் அம்பன் கமநலசேவை நிலையத்துடன் இணைக்கப்படுகின்றன.

## சிரமதானம்

(வண்ணார்பண்ணை)

பல வருட காலம் புனரமைக்கப்படாது கிடந்த தொல்புரம் மத்தி ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மன் ஆலய பிரதான வீதி இப்பகுதிபொதுமக்களதும்,பொதுஸ்தாபனங்களதும்முயற்சியால் சிரமதான மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இச்சிரமதான வைபவத்தை சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்திலிங்கம் ஆரம்பித்து வைத்தார். இச்சிரமதானத்தில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு உதவி அரசாங்க அதிபரினுல் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனுமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ரூடியோ**

உ

### அமரர் த. பாலரத்தினம் J. P.

அவர்களின்

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்புடையீர்,

நிகழும் இரத்தாட்சி ஆண்டு ஆடித்திங்கள் 31-ம் நாள் (15-8-84) புதன்கிழமை எமது இல்லத் தலைவராக இருந்து எம்மையெல்லாம் நன்முறையில் வழிகாட்டி, எம்மை விட்டுப் பிரிந்த அமரர் த. பாலரெத்தினம் J.P [முன்னுள் பிரபல வர்த்தகர், தரணியகலை] அவர்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி (ஆட்டைத் திவஷம்) அன்னுரது இல்லத்தில் (அனலைதீவு, 1ம் வட்டாரம்) நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் சமுகமளித்து அன்னுரது ஆத்மசாந்திக் கிரிகைகளில் பங்குபற்றிப் பிரா த்திக்குமவண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை நாடும்

**மனைவி, மக்கள், மருமக்கள்.**

முதலாம் வட்டாரம்,
அனலைதீவு. (1322)

## 31-வது நாள் நினைவஞ்சலி

### [நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்]

மலர்வு: 27-7-1966 உதிர்வு: 13-7-1984



எம்மையெல்லாம் ஆறுத்துயரில்ஆழ்த்திவிட்டு மிகக்குறுகிய காலத்தில் மீளாத் துயில் கொண்ட எம் அன்பே! உனது ஆத்மாசாந்தி அடைவதாக.


அன்னுரது மரணச் சடங்கின்போது வருகை தந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னுரது அந்தியேட்டி வைபவம் 12-8-1984 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர். நண்டர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தாயாரும், சகோதரர்களும்.**

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில். 1320

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**சின்னப்பு சத்தியேஸ்வரன்**
**[சத்தி]**

மலர்வு:
25-10-1951

உதிர்வு:
25-07-1983

தவமிருந்து பெற்ற செல்வா! தேசத்தொண்டா! கொடைவள்ளல் கர்ணு! எங்கள் உயிர்த்தம்பி! நீ எங்களைவிட்டுப் பிரிந்து செல்வச் சந்நிதி முருகனுடன் இரண்டறக் கலந்து ஓராண்டாகி விட்டது. ஆனுல் அந்த முருகனுக்கோ வெற்றிப் பெருமிதம். எங்களுக்கோ பேரிழப்பு. எங்கள் உயிர் எங்களை விட்டுப் பிரியும்வரை உன் நினைவால் உருகும்

அன்பு
**பப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள், மருமகள்.**

''திருத்தணிகை''
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. 1143

## வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

# மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

வார மலர்
ஈழநாடு
லங்கா
EELANADU VARAMALAR

# வீரகாவியம் படைத்த ஆழிக்குமரன்!

ராஜகோபால்

இருபதாண்டுகளுக்கு முன் அவன் ஆரம்பித்த அந்த வீரகாவியத்தின் கடைசி அத்தியாயத்தை எதிர்பாராமல் ஆங்கிலக்கால்வாயிலேயே முடித்துவிட்டான்!

சாதனைக்கு மேல் சாதனை செய்து, உலக சாதனைகள் செய்வதிலேயே ஒரு சாதனையாளனாகி, சரித்திரம் படைத்த நாயகனாக அமரத்துவம் அடைந்துவிட்டான்!

இரத்தத்தை உறைய வைத்த அச்செய்தியின் கொடுமை தாங்காது, கண்ணீர்விட்டு அழுதன பல நெஞ்சங்கள்! பத்தாண்டுக் கனவை நனவாக்கச் சீமைக்குச்சென்று, நடுநடுங்கவைக்கும் குளிர் நீருடன் சங்கமமாகிவிட்ட வீரமகனின் பதினெட்டு ஆண்டு கால நெருக்கமான நினைவுகள் என் நெஞ்சத்தைப் பிழிந்தெடுத்தன

''நான்கு தடவைகள் ஆங்கிலக்கால்வாயை நீந்திக்கடந்து உலகசாதனையைச் செய்யப் போகும் சமயத்தில் நீங்களும் என்னுடன் இருக்கவேண்டும் எனவிரும்புகிறேன் ஏற்கெனவே லண்டன் மாநகரத்தில் சிலகாலம் கழித்த அனுபவம் உங்களுக்கு இருப்பதால், இங்கு வந்து தங்கிச் செல்வது கிரமமாக இருக்காது என்று நினைக்கிறேன். வந்து இருந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்'' என்று அவன் கடைசியாக எழுதிய கடிதத்தில் இந்த வரிகள் மங்கலாகத் தெரிகின்றன.

அவனது வீரதொடர் காவியத்தின் பல அத்தியாயங்களை நேரில் கண்டு, அனுபவித்து எழுதமுடிந்த எனக்கு, கடைசி அத்தியாயத்தைப் பார்த்து எழுத இறைவன் விடவில்லை!

வீரத்தின் விளை நிலமாகத் திகழும் வல்வெட்டித்துறைதான் ஆழிக்குமரன் ஆனந்தனின் பிறந்தகம். அங்குள்ள, முன்னைய சுங்கக் கட்டடத்தின் முன்னால் உள்ள நீலக்கடலோரத்திலே அவர் காவியத்தின் முதலாவது அத்தியாயம் ஆரம்பமானது.

உடலெல்லாம் கிறீஸ் பூசி அப்பொழுதுதான் மென்மயிர்கள் முகத்திலே அரும்பிய கட்டழகு இளைஞனாக, கூடிநின்று வழியனுப்பிய ஆயிரக்கணக்கான மக்களைத் திரும்பிப் பார்த்து இருகரம் கூப்பி விடைபெற்றுக்கொண்டு தண்ணீருக்குள் இறங்கியதை அரைக்காற்சட்டை போட்ட 'பெடியனாக' நான் நின்று மெய்சிலிர்த்த நினைவுகள் இன்றும் என் நெஞ்சினுள் பசுமையாகப் பளிச்சிடுகின்றன.

பதினெட்டு வயதில், நாற்பத்தெட்டு மணிநேரம் தண்ணீருக்குள் மீன் குஞ்சாக நீச்சலடித்து, கோடிக்கரையை அடைந்து, பாக்குநீரிணையை நீந்திக்கடந்த சாதனையாளனாகிறார்!

செல்வகுமார் ஆனந்தனைப் பெற்றவர்கள் விவேகானந்தன் தம்பதி, மூத்த மகனாகப் பிறந்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகி சட்டத்தரணியானார்!

ஆனாலும் சட்டப்புத்தகங்களோடு அவர் உறவாட விரும்பவில்லை; விளையாட்டுத்துறையும், கலைத்துறையும் அவரது இருகண்களாயின.

—ஒரே ஊரில் பிறந்த தொடர்பு எங்கள் இருவரையும் நெருக்கமாக்கின: அவர் உணர்வுகளைப் புரியவைத்தன.

## முதல் அத்தியாயம்

1975 ஆம் ஆண்டு, ஏப்ரல் 29 சனிக்கிழமை—

ஆழிக்குமரனின் வீரத் தொடர்காவியத்தின் அதிதிகில் நிறைந்த அத்தியாயம் முக்கியமான, ஒருபெரிய உலகசாதனை நிகழ்ந்தநாள்.

தலைமன்னார் கிராமத்தின் கடலோரத்திலிருந்து ஆனந்தன் தனது நீச்சலை ஆரம்பித்து, முப்பத்துநான்குமணி நேரம் இடைவிடாது, அலைகடலுடன் போராடி, தனுஷ்கோடி மண்ணை மிதித்தார்.

முப்பத்து நான்கு மணி நேரமும் கடலில் அவருக்கு உதவியாகச் சென்ற எனக்கு அவர் மீண்டும் நீந்துவார் என்றநம்பிக்கை இருக்கவில்லை. அப்படி அவர் நீந்துவதைநான் விரும்பவுமில்லை.

தனுஷ்கோடி மண்ணில் மல்லாந்து படுத்தபடியே வானத்தை நோக்கி, எதையோ உற்றுநோக்கிக் கொண்டிருந்த அந்தவீரனை அணுகி, ''மீண்டும் நீந்தப்போகிறீர்களா?'' என்று கேட்கிறேன்.

சிரித்தபடியே எழுந்து கிறீஸ் டின்னைப் பார்க்கிறார்.

ஆனந்தனின் நண்பர் ராமகிருஷ்ணன் என்ற பாலா கிறீஸ்டின்னை எடுக்க, ஆழிக்குமரனின் உடன்பிறப்புக்கள் கருணாவும் ரவியும் அவருக்கு கிறீஸ் பூசிவிடுகிறார்கள்!

சாதனையொன்று செய்த இந்திய வழக்கறிஞர் மிகிர் சென்னின் சாதனையை முறியடிக்க, மீண்டும் தனுஷ்கோடிக்கடலில் ஆனந்தன் குதித்தார்!

தனுஷ்கோடிக்குப் போகும் போது முப்பத்துநான்கு மணி நேரம் திரும்பிவரும்போது பதினெட்டு மணிநேரம் மொத்தமாக ஐம்பத்திரண்டு மணி நேரம் கடலில் நீச்சலடித்த

## நீச்சல் வீரன் நீருடன் சங்கமம்!

வீரனின் உடலெல்லாம் புண்ணாகியிருந்தது. ஆனால் உள்ளமோ—

அவரே என்னிடம் ஒரு முறை சொன்னார்;

''என்னுடைய பயிற்சி, திறமை, இவற்றையெல்லாம் விட எனது தன்னம்பிக்கை தான் எனக்கு வெற்றியைத் தேடித்தருகிறது உடல்தளர்ந்தாலும், நான் உள்ளத்தைத் தளரவிடுவதில்லை உடலில்வலு விழுந்து, தசையெல்லாம் புண்ணாகிப்போன நேரத்திலும் கூட, எடுத்த காரியத்தைச் 'செய்துமுடிப்பேன்' என்ற உறுதி 'ஒரு சத்தியமாக' இருந்து உதவியுள்ளது''

பல்கலைக்கழகத்திலிருந்து ஆனந்தன் வெளியேறியதும், அவரது நெஞ்சில் நிறைந்திருந்த ஆசையைப்பற்றி ஒரு தடவை கூறினார்.

அவர் நினைத்ததைச் செய்து முடிப்பவர்.

எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் தமிழன் கொடி பறக்கவிடப் படவேண்டுமென்ற அவரது விருப்பத்தைப் பூர்த்திசெய்யப்போவதாகச் சபதமெடுத்தார்.

டென்ஸிங் மலைஏறும் பயிற்சிக் கல்லூரியில் சிலகாலம் பயின்று, அந்தச் சாதனையைச் செய்துமுடிக்க சிரமங்களைத் தனதாக்கிக் கொண்டார்!

அப்பயங்கர மலைச்சிகரத்தில் 24 ஆயிரம் அடிகள் வரை தன் பாதத்தைப் பதித்தார்!

எப்படியும் ஒருநாள் அந்த மலைச்சிகரத்தில் கொடி நாட்டுவேன் என்ற நம்பிக்கை அவர் மனதிலிருந்து அகன்றதில்லை!

### கின்னஸ் சாதனைகள்!

'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகத்தில், அவர்சாதனைகள் பதியப்பட்ட அனேக நிகழ்வுகளிலும் நான் அவருடனேயே இருந்திருக்கிறேன்.

அப்போது கொழும்பில்தான் அடிக்கடி அந்தச் சாதனைகள் நிறைவேறின அங்குள்ள பத்திரிகையில் நான் பணியாற்றிக் கொண்டிருந்ததால், மிகநெருக்கமான உறவு எனக்கு ஏற்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

# சுதந்திர சிந்தனை

முப்பத்தேழு வயதடைந்த இந்திய சுதந்திரம் எத்தனை தோல்விகளின் விளைவு என்பதை நினைவுகூர்வது நல்லது.

தோல்வியைப் பொருள்படுத்தாதே! வாழ்க்கையைத் தோல்வி அலங்கரிக்கிறது வாழ்க்கைக்கு அது கவிதை ரசமும் கொடுக்கிறது. இந்திய சுதந்திர இயக்கத்தின் நீண்ட நெடுங்கதை இந்தப் படிப்பனையையே எமக்கு முன்வைக்கிறது.

வட்டமேசைக்கு லண்டன் சென்ற மகாத்மா காந்தி வெறுங்கையுடன் திரும்பிய போது கையை விரித்தாரொழிய தளர்வடைந்ததில்லை அதற்குப்பின் 17 வருடம் நடந்த வீரப்போராட்டத்தில் அகில இந்தியாவும் விரக்தியடைந்த கட்டத்தில் தனித்துநின்று தள்ளாத வயதிலே ''வெள்ளையா வெளியேறு'' என்ற பிரேரணையை 1942 ஆகஸ்ட் 8-ல் நிறைவேற்றினார்.

வெள்ளையர் வெளியேறிய நாள் 1947 ஆகஸ்ட் 15 என்றால் அந்தக் கட்டளையின் தனித்துவமென்னே!

காந்திஜியும் நேருஜியும் இந்திய சுதந்திரத்தின் இரு கண்கள். தங்கள் அருமைத்துணைவிகளைஇழந்து தனிமை நிலையில் சுதந்திரப்போராட்டம் வீறுகொண்டது வியக்கத்தக்கது.

காந்திஜியின் தலைமை பாரதத்துக்குப் புனர்வாழ்வு அளித்தது. நேருஜியின் தலைமை புனர்வாழ்வு பெற்ற பாரதத்தை புதிய உலகைப் படைக்கத்தூண்டியது

# உங்கள் மனைவியைக் கண்டு பிடியுங்கள்

அடிக்கடி தனக்கு ஆடைகளை வாங்கி வந்து கொடுக்கும்படி தன்கணவனைத் தூண்டுபவள்-

★ ஆசைக்கார மனைவி.

ஆபரணங்களை எதிர்பார்ப்பவள்

★ பேராசைக்கார மனைவி.

நினைக்கும் போதெல்லாம் வெளியே அழைத்துச் செல்லும்படி சிரமப்படுத்துவள்-

★ வேலையில்லாத மனைவி.

கணவன் - தனக்கு மட்டும் சொந்தமாய் இருக்கவேண்டும் என்று நினைப்பவள்.

★ பைத்தியக்கார மனைவி.

கணவனை அலட்சியப்படுத்துபவள்-

★ உதவாக்கரை மனைவி.

முழு அன்பு ஒன்றையே பெரிதாக நினைப்பவள்.

★ உன்னதமான மனைவி.

கணவன் மீது உயிரையே வைத்திருப்பவள்-

★ உயர்வான மனைவி

இன்னல்களிலும் துன்பங்களிலும் தன்னைச சமாதானப் படுத்திக்கொண்டு நிறைவைத் தேடிக் கொள்பவள்-

★ உண்மையான மனைவி.

அறிவான குழந்தைகளைப் பெற்றெடுப்பவள்-

★ அளவான மனைவி.

அறிவான குழந்தைகளை ஈன்றெடுப்பவள்-

★ அதிர்ஷ்டசாலி மனைவி.

— சச்சி

## ஹி..ஹி

சரசு:- கட்டுறன் கட்டுறன் என்று இன்னும் உன்ரை புருசன் உன்ரை கழுத்தில தாலி கட்டேல்ல. இனி எப்பவாம் கட்டப்போறார்?

வள்ளி:- மகன் குமார் வெளி நாட்டுக்குப்போய் உழைத்துக் கொண்டு வரட்டும்; பிறகு கட்டுறன் என்கிறார்.

●

மகன்:- ஏனம்மா நாங்கள் என்ன தப்புப் பண்ணினாலும் அப்பா எங்களை வேறு யாரோடையாவது ஒப்பிட்டுத்தான் பேசுகிறார்?

தாய்: அப்பா பத்திரிகை ஸ்தாபனத்தில் 'புறூவ் றீடர்' அதாலதான் அவருக்குப் பழகிப்போச்சு.

—இ. பாலகுமார்

●

நாகராஜா: டேய் நேற்று உங்கடவீட்டை என்ன சண்டை நடந்தது?

டினேஷ்: என்ட மனைவி என்னோட கோவிச்சுகொண்டு 'தாய் வீட்டுக்குப்' போயிட்டா

நாகராஜா: எல்லா வீட்டையும் உப்படித்தான். போய் மனைவியைக்கூட்டி வாறம்.

டினேஷ் அவ நேற்றே வந்திட்டா.

நாகராஜா: அப்ப தாய் வீடு போனது எண்டாய்?

டினேஷ்: டேய் அவ 'தாய்வீடு' படம் பார்க்கப்போனவ.

●

ஒருவர்: கொழும்பை மறந்து எப்படி இங்கு வந்து இருக்கிறீர்கள்?

மற்றவர்: கொழும்பை மறக்கவில்லை இங்கு வந்தும். கொழும்புத் துறையில் தான காணி வாங்கி வீடு கட்டி இருக்கிறேம்.

●

நிரஞ்சலா: அப்பா 'அதோ பாருங்கள் எவ்வளவு அழகான வீடு. மேல் மாடியில் அதுதான் 'வெருளி' வைத்திருக்கிறார்கள்.

தந்தை: மேல் மாடியில் நிற்பது வெருளியல்ல மகளே, அந்த வீட்டுக்காரனின் மூத்தமகள்.

●

நகரவாசி: அடுத்த வீட்டில் புதுமாதிரி 'அன்ரனா' பூட்டியிருக்கிறார்களே

நண்பர்: அது அன்ரனா இல்லை, குப்பைவாளியை மாமரத்தில் தொங்க விட்டிருக்கிறார்கள்

●

ரஞ்சன்: 60 அடியில் ''அன்ரனா'' பூட்டியும் கொக்காவில் தெரியவில்லையே

அசோகன்: அன்ரனாவில் ஏறி நின்று பாரடா கொக்காவில் தெரியும்.

—கா. யோ. கிரிதரன்

# துருக்கியில் முப்பது நாட்கள்

**நா. மாணிக்க இடைக்காடர்**

பல ஆண்டுகள் வெளிநாட்டில் வசித்தபடியால் அடிக்கடி நான் பயணம் செய்வது வழக்கம். இதனால் பிரயாண சகுனத்திற்கு என் மனதில் இடம் கொடுப்பதில்லை. சகுனம் பார்த்துப் பிரயாணம் செய்வதென்றால் எனது உத்தியோகத்தைச் சரிவரச்செய்திருக்க முடியாது. ஆனால் ஒருமுறை கெட்ட சகுனத்தை நம்பவேண்டியிருந்தது. ஒரு மாதத்திற்குத் துருக்கிக்குச் சென்று அங்கிருக்கும் உணவு, விவசாய புள்ளிவிபர முறைகளை எப்படிச் சீர்திருத்தலாமென்று பார்வையிட ஐ.நா என்னை அனுப்பியது. நானும் மனைவியாரும் ஒரு மகளுடன் லண்டனில் அச்சமயம் தங்கியிருந்ததால் பயணத்தை லண்டனிலிருந்து தொடங்கினோம்.

புறப்படுவதற்கு முதல்நாள் நாங்கள் போகவேண்டியிருந்த பிரிட்டிஷ் விமான சேவை தடைப்பட்டது. (Strike) இது ஏதோ கூடாத சகுனம் என்று நினையாமல் வேறொரு விமானத்தில் (Lufthansa) பிரயாணம் செய்தோம். மியூனிக் (Munich) விமானநிலையத்தில் விமானம் மாறவேண்டும். அப்படியே மாறி அங்கரு (Ankara துருக்கித் தலைநகரம்) விமானத்தில் ஏறிக்கொண்டோம். விமானம் ஓடுபாதை(run way) சேர்ந்தது அப்பொழுது ஒலிபரப்பிமூலம் விமானத்தில் ஒரு குண்டு[bomb] இருப்பதாகவும் அதை வெளியேற்றத் தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினர் ஜெபமாலை உள்ள பிரயாணிகள் ஜெபமாலை மணிகளை கைவிரலால் எண்ணிக்கொண்டு கடவுளுக்கு சுலோகங்கள் சொல்லிக்கொண்டிருந்தனர் எனக்கு ஒரே கவலை அதாவது நானும் மனைவியாரும் ஒருமிக்க விமானத்திலிருப்பதால் குண்டு வெடித்தால் எங்கள் பிள்ளைகளுக்கு ஒரேயடியாகத் தாயும் தகப்பனும் இல்லாமல் போய்விடுமேயென்று. இதைவிட இறப்பதற்குக் கவலையில்லை. எங்கள் எல்லோரையும் உடனே விமான ஓடுபாதையருகில் இறக்கிவிட்டு, எல்லாப் பிரயாணிகளின் மூடைகளையும் (bags இறக்கினார்கள். ஒவ்வொருவரும் தங்கள் மூடைகளைக் காட்டத் திரும்பவும் விமானத்தில் ஏற்றினார்கள். கடைசியில் ஒரு பெரிய பொதியை ஒருவரும் தன்னுடையதென்று உரிமை கூறவில்லை ஜெர்மன் பொலிசார் ஏற்கனவே பலமோட்டார் வண்டிகளில் வந்துவிட்டார்கள். இந்தப்பொதியை ஏற்றிக்கொண்டு போனார்கள் இதிலேதான் குண்டு இருந்ததென்று கூறினார்கள். ஏதோ கடவுள் அனுக்கிரகத்தால் தப்பிவிட்டோம். ஆனால் எங்கள் கஷ்டங்கள் நீங்கவில்லை. அங்கரு விமான நிலையம் அணுகியதும் விமானம் இறங்கமுடியாதென்று கூறினார்கள் ஓடு பாதையில் சில நிமிடங்களுக்கு முன்இறங்கிய விமானம் ஓடுபாதையும் அதை சுற்றியிருக்கும் நிலமும் பனி (snow) மூடி. சரியாக ஓடுபாதை தெரியாமல் ஒரு பக்கத்து சில்லுகள் ஓடுபாதையிலும் மற்றப்பக்கதது சில்லுகள் வெறும் நிலத்தில் தொட்டபடியால் புதைந்துவிட்டன. இதனால் ஓடுபாதையை எங்கள் விமானம் பயன்படுத்த முடியாமல் பேறுட் (BEIRUT) நிலையத்தில் இறங்கியது எங்கள் மூடைகளை இறக்காமல் கையிலிருக்கும் சிறு கைப்பெட்டிகளுடன் (hand bags) ஒரு ஹோலில் தங்கவிட்டார்கள். கடும்மழையால் ஹோரல் சேர்ந்ததும்மின்சாரக் கோளாறால் விளக்குகள் அணைந்துவிட்டன. இவ்வளவு கஷ்டங்களுக்கு பின் மறுநாள் ஒருவிதமாக அங்கரு வந்து சேர்ந்தோம்.இம் முறை தான் கெட்ட சகுனம் என்னென்று அறிந்தேன்.

எல்லா வசதியுள்ள ஹோரலில் தங்கினோம். நாங்கள் ஒருமாதம் துருக்கியிலிருந்தபோது பனி(Snow) மூடியிருந்தபடியால் துருக்கி மண்ணை ஒருநாளும் பார்க்க முடியாமல் போய்விட்டது. எனது கடமையையிட்டு இரு முக்கிய ஐ.நா அதிகாரிகளைச் சந்தித்தேன். ஒருவர் ஐ.நாவின் துருக்கியிலிருக்கும் பிரதிநிதி. மற்றவர் ஐ நா உணவு விவசாயதாபன பிரதிநிதி. உணவுவிவசாய புள்ளிவிபரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் விவசாய அமைச்சு அதிகாரிகளையும் புள்ளிவிபர இலாகா அதிகாரிகளையும் சந்தித்தேன். இரண்டே இரண்டு நாளில் புள்ளிவிபரம் சேகரிப்பதில் துருக்கியிலிருக்கும் குறைகளை அறியக்கூடியதாக இருந்தது ஐ.நா அதிகாரிகளுக்கு ஓரளவு எனது அபிப்பிராயததை கூறி இதைப் பற்றி ஆழ்ந்து பார்க்கவேண்டும் என்று கூறினேன் இருபது ஆண்டுகளாக அமெரிக்க நிபுணர்களிடமிருந்து ஆலோசனை பெற்றும் விவசாய புள்ளிவிபரம் ஏன் முன்னேறவில்லையென்பதை துருக்கி அரசாங்கம் அறியவே என்னை அழைத்தது அமெரிக்க நிபுணர்கள் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து வரும் நிபுணர்கள் போல ஒரே பிழையைச் செய்தார்கள். அதாவது மூன்றும் உலக நாடுகளிலிருக்கும் சூழ்நிலை தங்கள் நாடுகளிலிருக்கும் சூழ்நிலைக்குசமன் என்று தப்பாக எண்ணி புத்தி கூறுவதால் இதை நடைமுறைப்படுத்த முடியாமல் தோல்வியடைவதே இவர்கள் செய்யும் பெரும் பிழை, உதாரணமாக புள்ளிவிபரத்தை எடுத்துக்கொண்டால் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தேவையான விவசாயப் புள்ளிவிபரத்தை கடிதமூலம் காணிக்காரர்களிடமோ அல்லது குத்தகை செய்பவர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். இந்த முறையை துருக்கி அல்லது இந்தியா அல்லது இலங்கையில் கடைப்பிடிக்க முடியாமைக்கு பல காரணங்கள் உண்டு. கடிதம் மூலம் தொடர்புகொள்ளக் கூடிய விவசாயிகள் இந்நாடுகளில் அதிகமில்லை. அதோடு விபரமாகப் புள்ளிகள் கொடுக்கத் தக்கஅறிவு இந்நாடுகளிலுள்ள விவசாயிகளிடம் இல்லை

இன்னுமொரு காரணம் ஏதாவது வரி அறவிடுவதற்கு அரசாங்கம் இப்படி புள்ளிவிபரம் பெறுகிறதாவென்ற சந்தேகம். இக்காரணங்களால் புள்ளி விபரம் அதிகாரிகள் மூலமே பெறவேண்டும். இவர்கள் வீடு விடாக அல்லது தோட்டம் தோட்டமாக சென்று சேகரிக்கவேண்டும். இதை அமெரிக்க ஐரோப்பிய ஆலோசகர்கள் அறிவதில்லை. இந்த விடயங்களை ஒரு விரிவுரை மூலம் துருக்கி அதிகாரிகளுக்கு ஒரு நாள் முழுக்க விளக்கினேன். மிகவும் அனுபவமுள்ள ஐ. நா. மொழி பெயர்ப்பாளர் மூலம் நான் ஆங்கிலத்தில் கூறியதை இந்த அதிகாரி [பெண்மணி] துருக்கி மொழியில் கூறினார் நாள்இறுதியில் எனக்கு ஒருபெரிய கரகோஷம் கிடைத்தது. காரணமென்னவென்று கேட்ட பொழுது முதல் முதலாக புள்ளி விபரம் சுலபமாக படித்துக் கொள்ளலாம் என்று விரிவுரையால் அறிந்ததில் மகிழ்ச்சி பெற்றனர். அதோடு ஏனோ துருக்கியிலுள்ள புள்ளிவிவர விரிவுரையாளர் இப்பாடத்தை கடினமாக்குகிறார்கள் என தெரியவில்லையென்றனர். இதற்கு நான் கூறியதாவது, யாராவது ஒருவர் ஒரு விடயத்தை நன்கு தெரிந்தவராயிருந்தால் இவரின் விரிவுரை மற்றவர்களுக்கு நன்கு விளங்கவேண்டும், கேட்பவர்களுக்கு நன்கு விளங்காவிட்டால் ஓரளவு விரிவுரையாளர்களுக்கு விடயம் போதியளவு தெளிவாக தெரியாதென்பதே எனது கருத்து

துருக்கி சென்று இரண்டு மூன்று நாட்களில் நான் ஆரம்பத்தில் நினைத்தது எதுவோ அதைத்தான் எனது இறுதிக் குறிப்பாக (Final Report) கொடுத்தேன். ஐ நா. அதிகாரிகள் என்னென்று முழுவிஷயமும் பார்க்குமுன் இரண்டு மூன்று நாட்களில் இந்த அறிவு வந்ததென்று வினவினர். இதற்கு காரணம் பரந்த அனுபவம் பல தேசங்கள் சென்று அந்தந்த நாட்டு உணவு விவசாய புள்ளி விபரம் சேகரிக்கும் முறைகளை அவதானிக்க, அத்துடன் பார்வையிடாத நாடுகளின் முறைகளை நூல்கள் மூலம், வாசிக்க, ஒரு புதுநாட்டை பார்த்ததும் இந்த நாட்டின் முறையை ஏற்கெனவேபார்த்தநாடுகளில் ஒன்றுக்கு கணக்கிடலாம் ஒப்பிட்டநாட்டின் அனுபவங்கள் ஏற்கெனவே தெரியும் அதனால் உடனே ஒரு சுமாரான அபிப்பிராயம்(Preliminary Idea)மனதில்வரும். அனேகமாக இது இறுதியில் பார்க்கும்போது சரியாயிருக்கும். நுட்பமாக பார்க்கும் போது ஏற்கெனவே மனதிலுள்ள அபிப்பிராயத்தை விஸ்தரித்தும் தேவையாயிருந்தால்சிறிதுமாற்றியும்(Modify) இறுதி அபிப்பிராயத்தை தெரியப்படுத்துவதே நான் கையாண்டமுறை.

நான் எனது கடமையைச் செய்துகொண்டிருக்கும் பொழுது மனைவியார் ஹோரலில் தனியாயிருக்க நேரிடுமென்று துருக்கி அரசாங்கம் யோசித்து ஆங்கிலம் தெரிந்த இரண்டு பெண் அதிகாரிகள் மனைவியாரை அழைத்து பட்டினத்தை பார்வையிட ஒழுங்குகள் செய்திருந்தார்கள். பழைய ஒற்றமன் (Ottoman) சாம்ராச்சியத்தை வல்லரசுகள் பிரித்து வேறு நாடுகளை சிருஷ்டித்த பொழுது கெமால் அரரேக் இப்பொழுது துருக்கி என்று கூறும் நாட்டை காப்பாற்றினார். அப்பெருமகன் தன்நாட்டுக்கு செய்த பல நன்மைகளில் ஒன்று பெண் விடுதலை. இஸ்லாமிய நாடாயிருந்தும் மொட்டாக்கில்லாமல் பெண்கள் வெளியேவந்து ஆண்களுடன் சரிசமமாக வாழவைத்தார் இதனால் எனது மனைவியாருடைய உதவிக்குவந்த பெண்கள் எல்லாவித உதவியை செய்ததுமல்லாமல் அந்நாட்டு வாழ்க்கையில் பெண்கள் ஆற்றும் பெரும் பங்கையும் விளக்கிக் கூறினார்கள்

[தொடரும்]

★

## மாகவிஞர் நிஜாமியின் நான்கு கவிதைகள்

சோவியத்தின் சாமர்கண்டு மொழி இயலாளர்கள் 16-ம் நூற்றுண்டைச் சேர்ந்த கையெழுத்துப் பிரதியொன்றைக் கண்டு பிடித்துள்ளனர். மாகவிஞர் நிஜாமியின் நான்கு கவிதைகள் இதில் உள்ளன 'மர்மங்களின் கருவூலம்' 'குஸ்ரோவும் ஷிரினும்', 'ஏழு அழகிகள்', சிக்கந்தர் நாமா' என்னும் கவிதைகள் அவை இவை 156?-63ல் ஒருவரால் பிரதியெடுக்கப்பெற்றவை. இதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் கலை அழகுடன் மிளிர்கிறது. இதில் பல வண்ணப்படங்களும் உள்ளன ஆனால் அவற்றை வரைந்த ஓவியர்களின் பெயர் இல்லை.

ஷிராஸ் நகரில் இக் கையெழுத்துப் பிரதி எழுதப்பெற்றது என்று உஸ்பெக் நிபுணர்கள் நிரூபித்துள்ளனர் 19-ம் நூற்றுண்டில் இக்கையெழுத்துப் பிரதிக்குப் புத்துயிர் அளிக்கப் பெற்றது. அது மிகுந்த திறமையுடன் முழுமையாகச் செப்பனிடப் பெற்றது.

மாகவிஞர் நிஜாமியின் படைப்புக்கள் ஒரு பெரிய தொகுப்பாக தாஷ்கெண்டில் வெளிவர இருக்கின்றன அவற்றில் இந்தக் கையெழுத்துப் பிரதியும் இடம்பெறும்

## கேட்கப்படாத கேள்விகள்

'அந்த' இரவில் அவன்
அத்தனையுங் களையென்றான்
'ஏது' மறியாதவள் போல் அவள்
ஏனத்தான் என்றாள்
அதிவீரராம பாண்டியனின்
அர்த்தங்கள் 'சரி' பார்க்கவென்றான்
அடப்பாவி! அப்போ நீ அன்று
தரகன் தலைமையிலே தளபதியாய்ப்
படைசூழ வந்து தலைமுதல் பாதம்வரை
இலட்சணங்களை மறந்து மொத்த
இலட்சங்களையா 'சரி பார்த்தாய் ?
என்றவளால் இப்போ கேட்கமுடியாததனால்
இன்னும் இது கேள்வியாய் நிற்கிறது!


வி. ரி. தமிழ்மாறன்

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!
இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்
நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்
SHABRA
துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரு"
61, நியூ புலர்ஸ் வீதி
கொழும்பு - 4-
தொ. பேசி. இல: 589310
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

ஒன்பது பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

## தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!



# 1

சௌந்தர்யமான வாழ்க்கையைக் கொண்டிருக்கிற ஒளிமயமான மனிதர்களின் எதிர் முன்னிலையில் நலவுலக ஊனக் களிப்புகளின் நடுவிலே பிரச்னையான சமூகத்தின் ஒரு இருள் வார்ப்பாக அவளின் பெயர் ஊறியப் பிரகடனமாயிருக்கிறது அவள்தான் மகேஸ்வரி

இருபத்தைந்து வயது வாலிப இளமையிலே உணர்வுகள் உருக்குலைந்துபோன ஒரு சோக நடைச் சித்திரமாக அவள் உலவுகிறாள்.

அவளது தொழில் வாழ்க்கையில் காட்டிக் கொள்ள முடியாத அந்தச் சோக, நிழல் நிஜ வாழ்வின் உயிர்ப்பு நேரங்களில் வெளிப்படுவது தவிர்க்க முடியாததுதான். அவள் இது வரை வாழ்ந்துவிட்ட அந்த ஊனவாழ்க்கையின் ஞூரங்களும் அதன் வெறிப்புகளுமே அவள் அறிந்த சொந்தம்.

அவை ஒன்றுகக் கிளைவிட்டுப்படர்ந்து கொண்டிருக்கிற நீண்ட பயணத்தில் அவைகளின் இலக்குகளுக்காக அவள் வெகுவாக ஒருதுருவ நிலையில் தன்னையே மாற்றிக்கொண்டு ஒரு வாழ்க்கை யுகத்தையே ஆரம்பித்திருக்கிறாள் உள்ளுரக் கைத்துப்போன அந்தச் சோகமான முழுக் காவியத்துக்குமே உரியவளாக இதோ அவள் வந்து கொண்டிருக்கிறாள்.

ஒற்றைக் வாகான மெல்லிய தேகத்தோடு மிகவும் மென்மையாகக் கண்களில் ஆழ்ந்த சோகம் வெறிக்க அவள் வந்து கொண்டிருக்கிறாள். பள்ளியிலிருந்து வருகிறாள். வேலைக்குப் போகின்ற பிற பெண்களைப் போல் மனதைச் கவர்ந்திழுக்கக் கூடிய எந்த விதநாகரீகத் தனங்களுக்கும் இடம் கொடாமல் அவள் மிக எளிமையாகவே இருக்கிறாள். சாதாரண சிலோன் வோயில் சேலை அணிந்து கொண்டு தலையிலேமெலிந்துகிடந்தஒற்றைப் பின்னலைத் திருப்பி மார்பிலே தவழ விட்டுக் கொண்டிருக்கிற பட்டிக்காட்டுப் பாமரத் தன்மையுடன் முகத்தில் எண்ணெய் வழியத் தெருவிலே அவள் நடந்து வரும்போது அவளின் காலடிச் செருப்புச் சத்தத்தைக் கேட்டுத்தெரு நாயொன்று ஊளையிட்டுக் குரைத்தபடியே அவளைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தது. அவள் தன்னைத்துரத்திக் கொண்டிருக்கிற விதியிலேயே சிந்தனையித்துப் போயிருந்ததால் அந்த நாயின் விரட்டலைக்குறித்து எந்தவித உள்ளக் கிளர்ச்சியையும் அடைந்து விடவில்லை. அவள் சாதாரண இயல்பிலேயே தெருவைக் கடந்துபோய் வீட்டைச்சேர்ந்தாள்

அப்போது மணி பன்னிரண்டுக்கு மேலாகி விட்டது. பள்ளிக்கூடம் விடுமுறைக்காக மூடப்படும் நாளாகையால் அன்றுநேரத்தோடு பள்ளிக் கூடத்தை மூடிவிட்டார்கள். இனி ஒரு மாதத்துக்கு அவளுக்கு ஓய்வுதான். இந்த விடுமுறைச் சலிப்பு நாட்களை அவள் எப்படிக் கழித்துத் தீர்க்கப் போகிறாள்?

அவ்வளவு தூர எல்லையில் அந்த வீட்டில் அவளை நிம்மதியாக இருந்துவிட முடியாது அப்புவின் நிர்ப்பந்தமே அவளைக் கனவு மயக்கத்தோடு வெளியில் உலாவ வைத்திருக்கிறது. மனதில் எப்போதுமே ஒரு வீறு, சத்திய தரிசனம் காணபது போன்ற, வக்கிர புத்தி தீண்டாத, உண்மை விழிப்புடன் அப்பு மாதிரியான பிரச்னை உறுத்தல்களுக்கு எதிராய் அவருடைய ஜீவன் ஒரு புதிய பிரவேசத்தில் களை கொண்டு நிற்கும் அவ்வீட்டின் தரித்திரக் கண்ணீரினூடே உயிர்ப்புப் பெற எழும் ஒவ்வொரு ஒளிச்சாயல் நாட்களிலும் அவளே சிரஞ்சீவித்தன்மை கொண்டு விளங்குகிறாள்.

அவள் உழைத்துக்கொண்டு வந்தால்தான் அவர்களுக்கு வாழ்வு மூத்ததம்பி வரதன் ஊர்க்காவாலிகளோடு சேர்ந்து ஒன்றுக்கும் உதவாமல் கெட்டுப்போனான் அவனைத் தெருவிலே திரியவிட்டு

## ஆனந்தி

விட்டு முதுகு வளையச் சுமக்கிறவள் அவள். அவனுக்குக் கீழே பத்துப்பேர். எல்லாரும் ஏதோ பாடசாலைக்குச் சென்று வருகிறார்கள். இரண்டாவது தம்பி குமரன் அட்வான்ஸ் லெவல்' படிக்கிறான். அவனுடைய ரியூசனுக்காகவும் படிப்புக்காகவும் அவள் தான் கடன் பட்டுச் செலவழிக்கிறாள். எடுக்கிற சம்பளம் இந்த நாளில் அவளொருத்திக்கே போதாமலிருக்கிறபோது இன்னும் ஏதாவது மேலதிகமாக உழைத்தால்தான் அந்தக் குடும்ப பாரத்தை அவள் கொண்டு இழுக்க முடியும்.

அவள் படலையைத் திறந்து முற்றத்துக்கு வரும் போது வாசல் திண்ணைக் கப்போடு சாய்ந்து ஒருக்களித்து ஆச்சி அரைத் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த அரைக்கனவு மயக்கத்திலும் கூட அவள் வாய்புலம்பி அழுது கொண்டிருந்தாள். அவளின் மூடிய கண்களிலிருந்து கண்ணீர் தானே வழிந்து கொண்டிருந்தது. இந்தச் சோகக் காட்சியைக் காணப் பொறுக்காமல் மகேஸ்வரி தான் கையிலே கொண்டு வந்த பிளாஸ்டிக் கூடையை ஒரு மூலையில் எறிந்து விட்டுக் கீழே 'சடக்'கென அமர்ந்து கொண்டு ஆச்சியைத் தூக்கி நிறுத்தினாள்.

தூக்கம் விடுபட்ட ஆச்சி நனவுலகில் விழித்துக் கொண்டு அசைவற்ற ஒரு மௌனப் பார்வையுடன் கண்களில் நீர் தேங்க மகேஸ்வரியை வெறித்தாள். இந்த அழுகையின் நித்திய சோகத் தடங்களே மகேஸ்வரிக்குப் பழகிப் போயிருந்ததால், அவள் சமநிலையில் மனதைத் தெளிவாக்கிக் கொண்டு அழுகை கலக்காமல் கேட்டாள்.

''என்ன ஆச்சி நடந்தது? ஏனணை அழுகிறாய்?''

''கொப்பர் குடி வெறியிலை வந்து எல்லாத்தையும் அடிச்சு நொறுக்கிப் போட்டுப் போகுது ......''

''அந்தப் புதுச்சட்டி பானையளையுமே?''

''ஆளைக்கண்டவுடனே அதுகளை நான் தைலாப்பெட்டிக்குள்ளை ஒளிச்சு வைச்சிட்டன். பழைய சட்டிபானை எல்லாம் போச்சுது இனிமேல் உந்தக் குடிகார விசரனை உள்ளை விடப்படாது...''

''அதெப்பிடி முடியும்? நாங்கள் விடாட்டாலும் உறவு விடுமே? கடவுள்தான் இதுக்கொரு வழிவிடவேணும் இதுகளை நினைச்சால் எனக்கு இஞ்சை இருக்கவே விசராய்க்கிடக்கு விடுதலை காலத்திலையும் ஏதேனும் வேலைசெய்தால் நல்லதெண்டு யோசிக்கிறன்''.

''எங்களுக்காண்டி நெடுக உழைச்சு உழைச்சு நீ ஓடாப்போனாய். விடுதலை

(6ம் பக்கம் பார்க்க)

### ஆனந்தி

ஏழாலை மேற்கில் வசிக்கும் இவரது இயற்பெயர் திருமதி. மாதினியார் ஆனந்தநடராசா. 1961இல் 'தமிழன்' என்ற அரசியல் பத்திரிகையில் எழுதத் தொடங்கியவர். இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருகிறார். 'ஈழநாடு' இதழில் 'ஆனிச் சம்பங்கி' என்ற பகுதியில் மீனு என்றொரு குறுநாவல் எழுதினார். 'ஈழநாடு' இவரது கதைகள் சிறு கதைகள் பலவற்றையும் பிரசுரித்தது. 'மாணிக்கம்' பத்திரிகையிலும் இவரது சிறு கதைகள் வெளிவந்தன. 'சுடர்' 'மித்திரன்' இதழ்களில் வேறு எழுத்தாளர்களுடன் கூட்டாக எழுதிய ஆக்கங்கள் வெளிவந்தன. ஆரம்பத்தில் 'தமிழ்க் குடிசொண்டான்' என்ற புனை பெயரில் எழுதியவர் இப்பொழுது 'ஆனந்தி' என்ற பெயரில் எழுதி வருகிறார், இவரது எழுத்து நடை தனித்துவமானது.


# ஆர்பிக்கோ

## இம்மாதச் சலுகைப் பொருள்

## 10% விலைக் கழிவு

## சாப்பாட்டு மேசைகளும் கதிரைகளும்

உருக்கினாலான சதுர, நீள் சதுர, வட்ட வடிவங்களில், பல்வேறு டிசைன்களில் சாப்பாட்டு மேசைகள். விலைகள் ரூபா 850/- தொடக்கம் ரூபா 2,200/–வரை.

மேற் பகுதி தோலினால் அமைந்த சொகுசு சாப்பாட்டு சுழல் கதிரைகளும், சாய்மனைக் கதிரைகளும் – ரூபா 275/- தொடக்கம் ரூபா 1,500/- வரையிலான விலைகளில்.

யாழ்ப்பாணம்: டிருன்ஸ் லங்கா மார்க்கட்டிங் லிமிட்., மொடல் மார்க்கட் கட்டிடம்.

மட்டக்களப்பு: ஈஸ்ரேர்ண் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ், மூனா வீதி.

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,

69, ஹைட்பாக் கோணர், கொழும்பு–2

தொலைபேசி: 25705–6

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்திலை யெண்டாலும் கொஞ்சம் ஆறுதலாய் வீட்டிலை இரன்...''

''இல்லை ஆச்சி, எனக்கு ஆறுதல் தேவையில்லை. எனக்கு சந்தோஷங்களும் தேவையில்லை. நான் எல்லாத்தையும் மறந்திட்டன். எங்கடை பிரச்சனைகளிலை இருந்தே எனக்குப் புதிசாய் ஒரு பிறவி கிடைச்ச மாதிரி இருக்கு. அதிலையே என்னைப் புடம் வைச்சு நான் எப்பிடியும் வளந்திடுவன் இதிலை என்னைப் பற்றிய ஆசை ஒண்டும் இல்லை. எப்பவோ என்ரை மனதிலை எனக்காக இருந்த ஆசையள் வெறுமைகளாய்ப் போச்சுது. எங்கடை வீட்டு நிலைப்பிலை எங்கடை சந்தோஷத்துக்கும் வெற்றிக்குமாய் நான் எதையும் செய்வன். கட்டாயம் செய்யவேணும் எண்ட நிலையே இப்ப வந்திட்டுது. ஆனபடியால் இந்த விடுதலை நாளிலையும் நான் உழைக்கத்தான் போறன்: அது என்ன வேலையெண்டும் யோசிச்சிட்டன். முந்தி மாதிரிப் பத்துப் பொம்பிளையளோடை சேர்ந்து கொண்டு கடகம் இடுப்பிலை வைச்சுக்கொண்டு தோட்டத்திலை போய் எரியிற வெயிலிலை நிண்டு வெங்காயம் நடப் போறன். அந்த வேலை என்ன எனக்குப் புதிசே ஆச்சி?''

ஏதோ பிரசங்கம் கேட்பது போல் கேட்டுக் கொண்டிருந்த ஆச்சி தனதுமகளின் முடிவைக் கேட்டு மனம் வெகுண்டு போய்த்தலைநிமிர்ந்து ரோஷம் பளீரிட்ட முகத்தோடு, உணர்ச்சிவசப்பட்டுச் சொல்கிறாள்:

''எங்களுக்கு ஒண்டுந்தான் இல்லை மானமாவது மிஞ்சட்டன் உனக்காண்டி இப்ப நானே உந்த வேலையளுக்குப் போறதை விட்டிட்டன் நீ போகப் போறியோ? உன்னைப் பாத்து ஊர் ஆக்கள் சிரிப்பினம் உன்ரை வாத்தி வேலைக்கும் அது அவமானந்தானே!''

''நல்லாச் சிரிக்கட்டன். எங்களுக்கு வயிறு பத்தி எரியுது பட்டினியிலை நாங்கள் செத்துப்போயிடுவம் போலையிருக்கு. இது எங்கடை பசிப் பிரச்னை. ஊர்சிரிக்கிற மானப் பிரச்னையை இதிலை பாக்கேலாது. ஊருக்குப் பயந்தால் ஒண்டும் நடக்காது. நான் போகத்தான் போறன்.''

''எடியே...!

அவளின் முடிவை மாற்ற முடியாமல் போய்விடுமோ என்ற ஆதங்கத்தில் ஆச்சி போட்ட அர்த்தமற்ற கோபக் கூச்சலைக் கேட்டு மனம் பதறாமல் சிரித்துக்கொண்டே கண்களில் கனையோடு மகேஸ்வரி சொல்கிறாள்;

''ஆச்சி! எதுக்கு எதுக்கோ வெல்லாம் வேஷம் மாத்திப் போட்டுக்கொண்டிருக்கினம். வெளியிலை உலகம் எப்பிடியிருக்கு? அது எவ்வளவு தூரத்துக்கு வளந்து வந்திட்டுது? தெருவிலை நான் எல்லாத்தையும் ஒருவேடிக்கைமாதிரிப்பாத்துக்கொண்டுவாறன். என்னைப் பாக்க ஒருத்தரும் வருகினமில்லை. எப்பவாவது நான் வேஷம் போட்டால்த்தானே என்னைப் பார்க்கலாம். எப்பவாவது நான் வேஷம் போட்டால் தானே வேஷத்தை மாத்தலாம். நான் நிறையப் பிரச்னைகளிலை உளுத்துப்போயிருக்கிறன். ஆனால் உயிர்க்கொடி இன்னும் பட்டுடபோகேல்லை. ஆனபடியா நான் கூலிவேலைக்குப் போகத்தான் போறன் இதிலை வாற சிரிப்பைப்பற்றி எனக்குக் கவலை இல்லை''

நித்திய இருட்டுச் சோகத்தில் இருந்துகொண்டு அவள் தன் பாதையில் வெளிச்சம் வரப்போவதாய் எதிர்பார்க்கிறாளா இல்லையா என்பது தெரியாமல் ஆச்சி திகிலடித்துப் போய் உட்காந்திருக்கிறாள். அவள்கூட ஒரு காலத்தில் தோட்டவேலைக்குப் போனவள் தான் மகள் 'ரீச்சர்' ஆனதிலிருந்து அவள் கௌரவம் கருதி அந்த அடிமைப் பிழைப்பைய அடியோடு மறந்து போனாள். அதற்கு பிறகு ஒரு நீண்டயுகமே கழிந்திருக்கிறது. ஆனாலும் மகேஸ்வரி மாறிவிடவில்லையே! அவள் மாறவிரும்பவும் இல்லை.

எந்தக் கௌரவப போர்வை நிழலுக்கும் இடம் கொடுக்க விரும்பாமல் அவள் சுயமான தன்னறிவு விழிப்போடு உள்ளூரப் பெருமை கொண்டிருக்கிற ஒரு அறிவாற்றல் தபஸோடு யதார்த்த சமூகத்தின் கரிப்புக்களுக்கு ஒரு சவாலாகவே மாறிவிட இருக்கிறாள்.

(அடுத்தவாரம் தொடர்பவர் சிவமலர் செல்லத்துரை)


(வளரும்)

## பள்ளிப் பகிடி

ஆசிரியர்: (மாணவனிடம்) 1930ம் ஆண்டில் பிறந்த ஒருவர் இன்று எத்தனை வயதுடையவராக இருப்பார்?

மாணவன்: அவர் ஆணு பெண்ணு சார்?


# நவீன உல்லாசக் குடிசைகள்



## எல்லாம் உங்களுக்காகவே

நீலக்கடல் ஓரத்திலே டாம்பீக முறையில் உங்கள் உள்ளத்திற்கு உவகை தரும் வகையில் உருவாக்கப்பட்ட புதுமையான அனுபவத்தைத் தருவது ஹாபர் வியூ ஹோட்டலேயாகும்.

★ உள்ளூர் உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எங்கள் பங்களிப்பான ''வார இறுதி விடுமுறை நாட்களை'' அறிமுகப்படுத்துவதில் நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

○ இரு நபர்களுக்கு வெள்ளிக்கிழமை இரவு உணவு முதல், ஞாயிறு மதிய உணவு வரை (உணவு, தங்குமிடவசதி உட்பட) கட்டணம் ரூபா 650/- மட்டுமே.
சனிக்கிழமை BAR - BE - QUE இரவு உணவும்
ஞாயிற்றுக்கிழமை BUFFET மதிய உணவும்

○ சிறுவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

○ கடற்கரையையும், துறைமுகத்தையும் ஒருங்கே நோக்கியவாறு அமைந்துள்ள குளிரூட்டிய அறைகள் உங்களுக்கு இசைவாக அமைந்துள்ளன.

○ உடன் வரும் வாகன சாரதிகளுக்கு இலவச தங்குமிட வசதியும் குறைந்த கட்டணத்தில் உணவு வகைகளும் வழங்கப்படும்.

○ எமது ஹோட்டல் வாசல் வரையுமான பஸ் போக்குவரத்து வசதிகள் உண்டு.

★ **கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியான விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.**

✶ **புதுமணத் தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்**

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாசப் பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

## ஹாபர் வியூ ஹோட்டல்

Telegrams: ANCHOR Kankesanturai. Telephone: 22802 JAFFNA

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH

HARBOUR VIEW HOTEL, KANKESANTHURAI.


# சிறுவர் மஞ்சரி

★ தொகுப்பு: என். செல்வராஜா

சீனக்கதை

## மனிதனும் குரங்குகளும்

முன்னொரு காலத்தில் ஒருவன் பல குரங்குகளை வளர்த்து வந்தான். அவன் ஒவ்வொருநாளும் குரங்குகளுக்குப் பழம் கொடுத்து வந்தான்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் அவன் குரங்குகளிடம் சொன்னான்:

''இப்போது பழங்கள் குறைவு. நான் உங்களுக்கு உணவாகப் பழவிதைகளைத் தருகிறேன். காலையில் மூன்று. மாலையில நான்கு. எப்படி?''

குரங்குகளுக்குக் கோபம் வந்துவிட்டது. ஒவ்வொன்றும் பலைக்காட்டிச் சத்தமிட்டுத் தன் அதிருப்தியைத் தெரிவித்தது

அந்த மனிதன் சற்று யோசித்துவிட்டுச் சொன்னான்: ''சரி, காலை மூன்று, மாலை நான்கு சாப்பிட்டு உங்களுக்கு வயிறு நிரம்பாவிட்டால் காலை நான்கும், மாலை மூன்றும் சாப்பிடுங்கள்''

உடனே குரங்குகள் அதிக பழவிதை கிடைத்ததுபோல் மகிழ்ச்சி அடைந்தன.

✶ ராணி சின்னத்தம்பி

## அப்பம்

அம்மா சுட்ட அப்பம்
அருமை யான அப்பம்
ஆசை யுடனே தின்றேன்
ஆடிப் பாடி நின்றேன்
இம்மா நிலத்தில் யாரும்
இப்ப டிச்சுட மாட்டாரே

— சரத் சூரியன்

## 'நியூஸ்' என்றால் என்ன?

'செய்தி' என்ற சொல்லை ஆங்கிலத்தில் நியூஸ் [News] என்பார்கள். அந்த ஆங்கிலச் சொல் எப்படி உருவாகியது என்பது உங்களுக்குத் தெரியுமா?

செய்திகள் நமக்கு நான்கு திசைகளிலுமிருந்து கிடைக்கின்றன. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளிலுமிருந்துப நாம் செய்திகளைப் பெறுவதனால் அந்த நான்கு திசைகளுக்கும் வழங்கும். ஆங்கிலச் சொற்களின் முதலெழுத்துக்களைச் சேர்த்து 'நியூஸ்' என்ற சொல்லையுருவாக்கி இருக்கிறார்கள் (N-North, E-East, W-West, S-South)

## இவ்வாரப் பொன்மொழி

''தனக்குத் தெரியாதவைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்பவன் ஐந்துநிமிடங்களுக்கு முட்டாளாக மற்றவர்களுக்குத் தென்படுவான். கேள்விகள் கேட்கத்தயங்கி பேசாமல் இருப்பவன் வாழ்நாள் முழுவதும் முட்டாளாக இருப்பான்''.

## விடுகதை

முன்னொரு ஊரின் பேராம்
முதலெழுத்தில்லாவிட்டால்
நன்னகர் மன்னர் பேராம்
நடு எழுத்தில்லாவிட்டால்
கன்னமாமிருகத்தின் பேர்
கடையெழுத்தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம்
ஊரின் பேர் விளம்புவீரே

[விடை: மதுரை]

## நீங்களும் பாடலாம்

கடந்த வாரம் ''நெற்பானையும் எலியும்'' என்ற பாடலைப் பாடிப் பார்த்திருப்பீர்கள். அப்படி நீங்களும் பாடல்களை இயற்றலாமே! இதோ உங்கள் திறமைக்கு ஒரு சோதனை! இன்று பிரசுரமாகும் பாடலின் இறுதிச் சொல்லை நீங்களே யோசித்துப் பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம். சரியான கவிதைகளை அடுத்த வாரம் பிரசுரமாகும்.

உணவில் சுத்தமாய் உள்ளதை அருந்து
உயரப் பறக்கும் பட்சி ...
மனமுள்ள வீட்டில் இடுவார் ...
வைத்தியர் நோய்க்குக் கொடுப்பது ...

கடலை விற்பவன் கட்டுவாள் கூறு
கரும்பைப் பிழிந்தால் வருவது ...
கொடிய பசியைப் போக்கும் ...
கூட்டலில் நாலும் இரண்டும் ...

குடிக்கும் நீரால் இனிப்பது நெல்லி
குளத்தில் வளர்ந்து பூப்பது ...
வடக்கே இருக்கும் நகரம் ...
வாயினால் பூச்சியைப் பிடிப்பது ...

தண்ணீருக்கு வேறு பெயர் அப்பு
சமையலுக்கு வேண்டுவது ...
விண்ணில் மேகம் மூள்வது ...
விரிந்த மரத்தில் கிளைப்பது ...

வேலை செய்தவர் வாங்குவார் கூலி
விளையும் பயிருக் கிடுவது ...
பாலகர் ஆடிக் களிப்பது ...
பாவையர் மங்கலச் சின்னம் ...

# நாக்கில் குடிகொண்ட சனி

**1658,** ஆனி 23ஆம் திகதி. யாழ்ப்பாணக் கோட்டையின் கதவுகள் திறந்தன. வெள்ளைக்கொடியைக் கரத்தில் ஏந்தியவாறு சப்ரின்மூர் முன்னே வர அவன் பின்னல் வைஸ் கமாண்டர் பிகாறோ தளர்ந்த நடையுடன் வந்தான். போர்த்துக்கீச சாம்ராச்சியத்தின் அஸ்தமனம் அவன் நடையில் தெரிந்தது.

கொமுசாறி வன்கோயனின் அருகில் நின்றிருந்த திசைவீரசிங்கன், பிகாறோவைப் பார்த்ததும் அடங்காத சினம் கொண்டான். அவன் வாழ்வில் இன்றைய தாழ்வுகளுக்கு பிகாறோவே முழுப்பொறுப்பாளி. கச்சாயில் கௌரவமாக வாழ்ந்துவந்த அவனது வாழ்க்கையின் அமைதியைச் சீரழிக்கவைக்கும் விசமவிளையாட்டைச் செய்தவன். தன்னையறியாமலேயே தன் அரையில் இருந்த வாளை உருவிக் கொண்டு பாய்ந்தான்.

கொமுசாறி வன்கோயன் நிலைமையைப் புரிந்துகொண்டு திசைவீரசிங்கனின் கரத்தைப் பலமாகப் பற்றிக்கொண்டான்.

''முதலியார், உமக்கென்ன விசரா? அவன் சமாதானத் தூதுபேச வந்திருக்கிறான். அடங்கியிரும்...'' என்று சற்றுக்கடுமையாக எச்சரித்தான். வன்கோயனின் குரலில்

## 11

தொனித்த கடுமை அவனை அடங்கவைத்ததாயினும் அமைதியடைய வைக்கவில்லை.

கப்ரின் மூர்ரையும் வைஸ் கமாண்டர் பிகாறோவையும் வன்கோயன் முன் அழைத்து வந்தார்கள். வன்கோயன் அவர்களை வெற்றிக்களிப்புடன் ஏறிட்டுப் பார்த்தான். வெற்றிமகளைக் கீழே நழுவவிட்டுவிட்டு அவர்கள் நின்றிருந்தார்கள். வன்கோயன் அருகில் நின்றிருந்த கச்சாய் வன்னிமையை கப்ரின்மூர் ஏறிட்டுப் பார்த்தான். பிகாறோ வெறுப்புடன் பார்த்தான்.

''நாங்கள் சரணடையத் தயாராக இருக்கிறோம். கோட்டையை உங்கள் வசம் ஒப்படைக்கத் தயாராகவுள்ளோம். ஆனல் அதற்கொரு நிபந்தனை...'' என்றான் பிகாறோ.

''சொல்''

கோட்டையில் இப்போது இருப்பவர்கள் அனைவரும் தங்கள் சொத்துக்களையும், அடிமைகளையும் ஒரு சில துவக்குகளையும் எடுத்துக் கொண்டு வெளியேற அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் கோட்டையில் இருப்போருக்குச் சொந்தமான வீடுகளையும் வயல்களையும் விற்று அவற்றுக்குரிய பொருளைப் பெறவும் அனுமதிக்க வேண்டும் ...'' என்றான் வைஸ் சமாண்டர் பிகாறோ. அவன் குரல் சோகத்தில் தளதளத்தது.

கொமுசாறி வன்கோயன் ஏளனமாக நகைத்தான்.

''நிபந்தனையுடன் சரணடைவதை ஒல்லாந்த மகாராணி விரும்புவதில்லை. சரணடைவதென ஆகிவிட்டால் நிபந்தனை விதிக்கும் உரிமை தோற்பவனுக்கில்லை. வேண்டுகோள் விதிக்கும் உரிமைதான் அவனுக்குண்டு ...''


''நல்லது ... அதை அப்படி வேண்டுமாயினும் எடுத்துக் கொள்ளலாம்...''

''வேண்டுகோள் ...? நல்லது. கமாண்டர் ... பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்... இப்போது கோட்டைக்குள் எத்தனை பேர் உள்ளனர்''?

''மொத்தமாக மூவாயிரத்து அறுநூறு பேர் இக் கோட்டைக்குள் ...'' - பிகாறோ வார்த்தையை முடிப்பதற்குமுன் வன்கோயன் வியப்புடன் குறுக்கிட்டான்;

'இந்தக் கோட்டைக்குள் மூவாயிரத்து அறுநூறு பேரை மாடுகள் மாதிரி அடைத்தா வைத்திருக்கிறீர்கள்? ...''

''இல்லை ... உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வெட்கம்



கெட்டு அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள் ... அவர்களில் எழுநூறு பேர் போரில் மரணமடைந்து விட்டார்கள் ஆயிரத்து இருநூறு பேர் காயமடைந்தவர்களாகவும் நோய்வாய்ப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். மிகுதிப் பேர் பசியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள், கமாண்டர் ...''

''பரிதாபம்... பரிதாபம்'' என்றான் வன்கோயன்.

''பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?...''

அவனை, பிகாறோ வெறுப்புடன் பார்த்தான்.

''அடிமைப் பெண்கள் நூறு பேர் வரையில் உள்ளனர்...''

''வெள்ளைப் பெண்கள் எத்தனை பேர்?''

''அவர்கள் விவாகமானவர்கள் . . ''

''இந்த யுத்தத்தில் விதவையானவர்கள் ... விவாகமாகாத பெண்கள் ... இல்லாமலா இருப்பார்கள் ... ''

''காமாண்டர் சேர் ... கூலிப்படையினரையும் அடிமைகளையும் உங்களிடம் ஒப்படைக்கின்றோம். ஏனையோரை வெளியேற விடுங்கள். நாங்கள் கோவாவிற்குச் சென்றுவிடுகின்றோம்'' என்று பிகாறோ பரிதாபமாக இரந்தான்.

''உமது வேண்டுகோள்களை நாங்கள் பரிசீலனை செய்து நிறைவேற்றுகின்றோம். முதலில் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு வீரர்களைச் சரணடையச் சொல்லுங்கள். கோட்டைக்கதவுகள் திறக்கட்டும். உயர்கொத்தளங்களில் பறக்கின்ற போர்த்துக்கீசக் கொடிகள் இறக்கப்படட்டும். அவ்விடங்களில் ஒல்லாந்தசாம்ராச்சியத்தின் வெற்றிக்கொடிகள் பறக்கட்டும்...'' என்று வன்கோயன் கட்டளையிட்டான். ஒல்லாந்த வீரர்கள் வெற்றிக்கோஷமிட்டனர்.

அவன் கட்டளையிட்டபடி காரியங்கள் விரைந்து நடந்தன.

வன்கோயன் ஒல்லாந்தப் படையைக் கோட்டைக்குள் போக அனுமதிக்கவில்லை. தெரிந்தெடுத்த வீரர்களுடன் உள்ளே நுழைந்தான். திசைவீரசிங்கனையும் வெளியில் இருக்கச் செய்தமை திசைவீரசிங்கனுக்குச் சற்று வருத்தத்தைக் கொடுத்தது.

யாழ்ப்பாணக் கோட்டையின் வீழ்ச்சியுடன் போர்த்துக்கீச சாம்ராச்சியம் இலங்கையில் அஸ்தமித்தது. யாழ்ப்பாணக் கோட்டையின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் ஏதுக்களாயின. கொமுசாறி வன்கோயனின் முற்றுகை பங்குனி 20 இலிருந்து ஆனி 22 வரை நீடித்ததால், கோட்டைக்குள் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடும் பரவியநோய்களும் அவர்களைச் சரணடையத் தூண்டிவிட்டன. இலங்கையின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் கோட்டைகளை இழந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையை மட்டும் தம்வசம் வைத்திருப்பதில் பயனில்லை என்ற உணர்வு தரைமார்க்கமாகவும் கடல்மார்க்கமாகவும் ஒல்லாந்தப்படை ஒரேவேளையில் தாக்கும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. நீண்டமுற்றுகையின் பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதலால் கொத்தளங்கள் சிதைந்தன. கோட்டை மதில்கள் தகர்ந்து போயின. துப்பாக்கி மருந்துக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் தட்டுப்பாடேற்பட்டது. உணவில்லாமையினால் இறந்தவர்களைவிட ஒல்லாந்தரின் பயங்கரமான எறிபொறிகள் ஈவிரக்கமின்றி வீசிய கற்களுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்தது.

இவை யாவும் போர்த்துக்கீசரைச் சரணடைய வைத்தன.

வெற்றிப் பெருமிதத்தில் ஒல்லாந்தர்கள் சரணடைந்தவர்களை மிகக்கேவலமாகநடத்தினார்கள். ஆயுதங்கள் யாவும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டன, கோட்டைக்குள் இருந்தவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டார்கள். அடிமைகளும் கூலிப்படையினரும் ஒல்லாந்தருக்கு விசுவாசம் தெரிவித்ததால் அவர்கள் கோட்டையின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருக்குமாறு பணிக்கப்பட்டனர்.

போர்த்துக்கீசர் வரிசையாக நின்றனர். ஆண்கள் ஒரு புறத்திலும் பெணகள் ஒரு புறத்திலுமாக நிறுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து நகைகள், தங்கம், வெள்ளி முதலான விலைமதிப்பு மிக்க பொருட்கள் யாவும் உருவி எடுக்கப்பட்டன.

''இது அநியாயம், கமாண்டர்...'' என்றான் கோட்டையின் முன்னாள் கமாண்டர் பசெண்டா.

''இது அநியாயமல்ல...இது யுத்த தர்மம்'' என்றான் வன்கோயன்.

அவர்களைப் பலர் சோதனையிட்டார்கள். ஆடைகளுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கநகைகளும் வைரக்கற்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டதனல். கைதிகள் அனைவரையும் தங்கள் ஆடைகளைக் களையுமாறு வன்கோயன் கட்டளையிட்டான். வரிசையாக நின்றிருந்த போர்த்துக்கீசக் கைதிகள் வெட்கத்துடனும் ஆத்திரத்துடனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். மனைவி, மக்களின் முன்னல் ஆடைகளைக் களையச் சொல்கின்ற அநாகரிகத்தை அவர்கள் எதிர்கொள்ளத் தயங்கினர்.

ஆனல் வன்கோயன்கட்டளை நிறைவேற்றப்பட்டது. வெட்கத்துக்குரியது என மறைக்கப்பட்ட உடலின் பாகங்களையும் அந்த வெட்கமற்றவர்கள் பரிசோதித்துப் பார்த்தனர்.

ஆண்கள் யாவரும் பரிசோதனை செய்யப்பட்டு ஒரு புறமாக நிறுத்தப்பட்டனர். அடுத்துப்பெண்கள் பரிசோதனைக்குள்ளாகினர். வன்கோயனின் வெறி விளையாட்டு விகற்பமாகப்போனது. ஆண்களைப்போல பெண்களையும் நிர்வாணமாக்கி சோதனை செய்தான்.

விலைமதிப்புள்ள சிறு பொருளைக்கூட அவர்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் இருபிரிவுகளாகப் பின்னர் பிரிக்கப்பட்டனர். கலியாணமாகி குடும்பமாக இருக்கும் தம்பதிகள் ஒரு புறமாகப் பிரிக்கப்பட்டு கோவாவிற்கு அனுப்பிவைக்கப்படவிருந்தனர். விதவைகளும் கலியாணமாகாத வயது வந்த பெண்களும் கோட்டைக்குள் தடுத்துவைக்கப்படவிருந்தனர். விவாகமாகாத போர்த்துக்கீச வீரர்களும் உயர் அதிகாரிகள் சிலரும் பத்தேவியாவிற்குக் கைதிகளாக விசாரணைக்கு அனுப்பப்படவிருந்தனர். கப்ரின் மூர் வைஸ்கமாண்டர் பிகாறோ, கமாண்டர் பசெண்டா என் போர்பத்தேவியாவிற்கு அனுப்பப்படவிருந்தனர்.

வைஸ்கமாண்டர் பிகாறோவின் மனைவியை, கோவாவிற்கு அனுப்பிவைப்பதாகக் கூறி வன்கோயன் தன்னுடன் கோட்டையில் அமர்த்திக் கொண்டான். பிகாறோ வேதனையால துடிதுடித்தான்.

நார்டென் கப்பலும் வேறிரு கப்பல்களும் பத்தேவியாவிற்கு திரும்பிச் செல்ல இருந்தன. அவற்றில் முக்கிய கைதிகள் ஏற்றப்பட்டு அக்கப்பல்களின் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டனர். கோட்டை கட்டுவதில் அனுபவம் வாய்ந்த போர்த்துக்கீசக் கைதிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டனர்

அன்றிரவு கோட்டையில் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடந்தன குருபால் தேயஸ் நன்றிப்பிரார்த்தனை நடத்தினார்.

ஒல்லாந்த நாட்டு மது தாராளமாக அன்றிரவு வீரர்களுக்கு பரிமாறப்பட்டது. அவர்களின் அசுர உடற்பசிக்கு அக்கோட்டையில் பிடிபட்டிருந்த அடிமைப் பெண்களும் வெள்ளைப் பெண்களும் பலியாகினர்.

ஒல்லாந்தப்படையில் உயர் பதவி வகித்தவர்கள் தெரிவு செய்தபின் எஞ்சிய பெண்களை வீரர்கள் பங்கிட்டுக்கொண்டார்கள். பெரும் போராட்டம் அங்கு நிகழ்ந்தது, சிலர் தலையா பூவா என நாணயத்தினை எறிந்து பார்த்துப் பிரச்னையைத் தீர்த்துக்கொண்டார்கள். சிலர் வாள்களை வீசி மற்றவனை மண்தழுவ வைத்து, பெண்ணைத் தழுவினார்கள்.

வன்கோயன் எதிலும் தலையிடாது பூரண சுதந்திரத்துடன் அன்றிரவைக் கழிக்க விட்டான்.

வெற்றிக் களிப்பில் மூன்று நாட்களாகத் திசைவீரசிங்கனை எவரும்கவனிக்கவில்லை

மூன்றும் நாள் அதிகாலை - வன்கோயன் அவனை அழைத்தான்.

''முதலியார், இந்த நாட்டினைக் கைப்பற்ற நீர் செய்த உதவிகளை என்றும் மறவேன். உமக்கு அதற்குப் பரிசாக என்ன வேண்டும் என்று கேளும் மறுக்காமல் தருகின்றேன்.''

''வெற்றிக்களிப்பில் என்னை மறந்து விட்டீர்களோ என்று எண்ணிவிட்டேன். மறக்காமல் இருந்தமைக்கு நன்றி. துரை அவர்களே, எனக்கு என் பிரதேசத்தின் முதலியார் பதவியும் கச்சாய் வன்னிமைப் பதவியும் வேண்டும்.''

''அவை உமக்கேகிடைக்கும் முதலியார்... ஆனல் எப்போதாவது எம்முடன் நீர் பகைத்துக் கொண்டு, போர்த்துக்கீசரை எம்மிடம் காட்டித் தந்ததுபோல நடக்கமாட்டீர் என்பது என்ன நிச்சயம்? ...'' — வன்கோயன் ஆழமாகத் திசைவீரசிங்கனை பார்த்தான். அவன் மனதை ஊடுருவிப் பார்ப்பது போல விழிகள் துளைத்தன.

''அப்படி ஒரு நிலையை நீங்கள் உருவாக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன்...'' திசைவீரசிங்கனின் துணிச்சலை வன்கோயன் மனதிற்குள் பாராட்டிக்கொண்டான்.


''அப்படி ஒரு நிலை எப்படி உருவானது. முதலியார்?...''

''இனிச் சொல்வதில் தப்பில்லை ...'' என்ற திசைவீரசிங்கன், தன் கதையைச் சொன்னான். போர்த்துக்கீசப் பெண்ணொருத்தியைத் தான் மனைவியாக அடைய விரும்பியதைச் சொன்னான். அதற்கு ஒத்துக்கொண்ட வைஸ் கமாண்டர் பிகாறோ தன்னை அவமானப்படுத்துவதற்காக குதிரைவண்டியில் பறங்கிநாய் ஒன்றினை அனுப்பி வைத்த அவமானத்தைச் சொன்னான். அந்தப் பழிவாங்கல் தான் உங்களை இந்த மண்ணின் மன்னனாக்கியது'' என்றான.

வன்கோயன் சற்று வியப்பினை முகத்தில் காட்டினன்.

''நீர் செய்தது சரியே, முதலியார் ... போகட்டும் உமக்கு வேறென்ன வேண்டும் ?''

[10ம் பக்கம் பார்க்க]



## தமிழ்தந்த தாதாக்கள்

# சிவராத்திரி புராணம் தந்த வரத பண்டிதர்

**க.சி.குலரத்தினம்**

**தமிழ்ப்புலவர்கள் பலர் வடமொழியில் நூல்கள் செய்தனர் இது அக்காலத்துப் பெருவழக்கு.**

வரத பண்டிதர் சிவராத்திரி புராணஞ் செய்தபின்- நெல்லை நாதர் என்னும் புலவர் ஒருவரும் சிவராத்திரி புராணஞ் செய்துள்ளார். நெல்லைநாதப் புலவரின் புராணத்தை வட்டுக்கோட்டை நாகேசுஐயர் சிவசுப்பிரமணிய ஐயர் என்பார் திருத்திக் கொடுப்ப அவ்வூரவரான வேலாயுதர் சதாசிவம்பிள்ளை என்பார் புரசை சபாபதி முதலியாரின் சிறப்புப்பாயிரத்தோடு 1881ஆம் ஆண்டில் சென்னை ஸ்கொட்டிஷ் யந்திர சாலையில் பதிப்பித்துள்ளார். ஐந்து அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் 303 திருவிருத்தங்களைக் கொண்டது

இவ்வாறாக சிவராத்திரி புராணம் பாடிய முன்னோடியாய வரதபண்டிதர், தமக்குண்டான புலமை வேகத்தில் ஏகாதசி விரதம் பாடினார். இது இன்று கிருஷ்ணன் கோயில்களிலேதான் பெருமளவில் அனுட்டிக்கப் பெற்றுவருகின்றது. அதுவளர்பிறை தேய்பிறை ஆகிய இரு உவாக்காலங்களிலும் பதினொராம் நாளில் பக்திபூர்வமாக அனுட்டிக்கப்பெறுகிறது. அது ஆண்டில் இருபத்தைந்துமுறை வருகின்றதாயினும் ஒவ்வொன்றும் ஒவ்வொருபெயர் பெற்றுச்சிறந்து நிலவுகிறது ஒருநாள்வைகுந்த ஏகாதசி எனப்பெரும் சிறப்புப்பெறுகிறது

சிவராத்திரி விரதம் போல இதுவும் நித்திரை கொள்ளாமல் அனுட்டிக்க வேண்டிய விரதமாகும். திருமாலுக்கு அடிமைசெய் என்று ஔவையார் அருளிய முறையில் ஏகாதசி விரதம் எத்தெய்வத்தின் பெயரிலாயினும் நல்லதொரு விரதமாகும். அன்று சந்திரன் சூரியன் நிலையில் எமது உடம்புக்கு ஏதோ ஒரு நல்லபயன் கருதியே முன்னோர் இதனைக் கண்டு எமக்குவிட்டுச் சென்றனர்.

### ஏகாதசி நாள்

### எமக்கருள்

### பாலித்த நாள்

முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்த போது முதலில் எழுந்தது ஆலகால விடம். அந்த விடம் அங்கே கூடி நின்றவர்களைத் துன்புறுத்திய போது திருமாலின் நிறத்தையும் நீலம் பாலிக்கச்செய்து விட்டது. விடத்தின் வேதனையைத் தாங்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்து முறையிட்ட போது அவர்கள் மேலிரங்கிய இறைவன் சுந்தரரை அனுப்பி அதனை எடுத்துவரச்செய்து உள்ளங்கையிலடக்கிப் பருகிய வேளையில் உமையவள் வேண்டிக்கொள்ள அவர் அதனைக் கழுத்தளவில் தடுத்து நிறுத்தி நீலகண்டர் ஆயினர். எல்லோரும் வாழச் சிவபெருமான் ஆலமுண்டநாள் ஏகாதசி. பின்னர் திருப்பாற்கடலில் அமுதம் தோன்றிய நாள் துவாதசி. அமுதமுண்ட தேவர்கள் ஆடிப்பாடி ஓய்ந்த பின்பே பதின்மூன்றும் நாளில் சிவபெருமானுக்கு நன்றி சொல்ல நாடினர். அவர்கள் செய்தபிழைகளைப் பொறுத்தருளி வாழ்வளித்த நாள் பிரதோஷ நாளாயிற்று பிழை பொறுக்குமாறு சிவனை வேண்டி வழிபடுவதற்கு மிகவும் ஏற்றநாள் பிரதோஷ நாளாயிற்று

### வடமொழி வழிவந்த

### வரன்முறைப்புராணம்

வரதபண்டிதர் வடமொழி கைவந்த வரகவியுமாவர். ''வடநூல் சொன்னவழிகண்டு தண்டமிழால் வகுத்தல் செய்தான் வரராச பண்டிதன்'' என்பது ஏகாதசிப்புராணத்தின் பாயிரப்பாடல். ஒருகாலத்தில் தமிழராயிருந்தும் புலவர்கள் பலர் வடமொழியிலேயே பல நூல்கள் செய்துள்ளார்கள். அது அக்காலத்துப் பெருவழக்காகவும் நிலவியது என அறியக் கிடக்கிறது

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலிருந்து, பறங்கிக்காரனுக்குப் பசுக்கன்று கொடுப்பதிலும் பார்க்கப் பரதேசம் போதல் நன்றெனப்போன ஞானப்பிரகாசர் போனவிடத்திலே வங்காளதேசத்திலேவடமொழி வகுப்பு நடந்த இடத்தில் தூரத்தில் நின்று பாடங்களை ஒலிப்பதிவு செய்தாற் போல மனப்பதிவு செய்த பல மேதாவிலாசம் பெரிது. அவர் வடமொழியில் பல நூல்கள் செய்து சிதம்பரத்துப் பிராமணர்களைத் திடுக்குறச்செய்த போது, ஒருவர் 'உவருக்கு வடமொழிதான் வரும், தமிழ் வராது'' என்று கூறக்கேட்டு. ''அப்படியுமாமோ! இதோ பார்!' எனக் கூறிச் சிவஞான சித்தியாருக்குத் தமிழில் அருமையான உரை செய்து காண்பித்தார் இன்னும் பல நூல்களும் செய்தார்.

வரதபண்டிதர் வடமொழியிலிருந்தவாறு ஏகாதசி புராணத்தை 258 பாடல்களில் தமிழ் செய்தார். நூலமைப்பில் கடவுள்வாழ்த்து அவையடக்கம் பாயிரம் என்பன பயின்றுவர பின்னே மூன்று சருக்கங்கள் முறையாக வந்தமைந்துள்ளன. காலநிர்ணய சருக்கம் உருக்குமாங்கதசருக்கம், வீமேகதிச் சருக்கம் என்பன நூலின் முக்கிய பாகங்களாகும்.

பாயிரமாயமைந்த ஓரேயொரு செய்யுளில் அரங்கன் மைந்தன், சுன்னாகத்துப் பூசுரன். புலவர் புகழ் வரதராச பண்டிதன் என்பனவாகிய விபரங்களோடு இது திருமாலுக்குரிய விரதம் எனக் கூறப் பெற்றுள்ளது.

''மின்னு கதிர்த் திகிரியங்
கைப் பெருமானுள்ளம்
விருப்புறுமே காதசியாம்
விரதமேன்மை

மன்னுகடல் புடவிதனில்
வடநூல் சொன்ன வழி
கண்டு தண்டமிழால் வகுத்
தல் செய்தான்

றன்னுபுகழ்ப் பூசுரர் தங்
குலத்தில் வந்து தோன்று
மரங்கன் சுதன் நற் சுன்னை
நாடன்

பன்னுதமிழ்ப் புலவர்புகழ்
வரதராச பண்டிதன் மண்
ணுலம் மதிக்கும் பாவல்
லோனே''

### காலநிர்ணயம்

சைவசமய விரதகால நிர்ணயத்தில அண்மைக் காலத்தில் பெருங் கருத்துமோதல்கள் வந்து பஞ்சாங்கக்காரர் படுத்தும்பாடு சிலவேளைகளில் வேதனையாயும் இருந்தது. ஆனா ஏகாதசி விரதத்தைப் பொறுத்தவரையில் காலநிர்ணயம் இறுக்கமாக அமைந்துள்ளது அதுவும் முன்வந்த புராணங்கள் பலவற்றில்முறையாக வந்தமைந்ததாகும் என்பர். எனவே அங்கே ஊசலாட்டத்திற்கு இடமில்லாது தெளிவாக உள்ளது

''முன்னுரைத்த புராணங்
கள் தம்மிற் சொன்ன
முறைமையெலா மாய்ந்த
வற்றின்
முன் சொன்னாற் போற்
பின்னுரைத்தா ரிம்முனிவர்
சிலகி ரந்தம்
பேசுமிவைபி ரண்டனையும்
பேணியந் நாள்

மன்னுவித்தி யாரணர்
திரட்டி யொன்றாய்
வடித்தெடுத்த கிரந்தத்தின்
வழிநூல் கண்டு
வின்னுதன்மா தவனேகா
தசியென்றோதும்
விரத மான்மியந் தமிழால்
விளம்பலுற்றேன்''

கால நிர்ணயத்தில் பல நூல்கள் எடுத்தாளப் பெற்ற செய்திகள் வந்துள்ளன. கருட புராணம், சூரிய சித்தாந்த புராணம், பாகவத புராணம், பிரம்மகைவர்த்த புராணம். ஆக்கினேய புராணம், விட்டுணு ரகசிய புராணம், பவிடியபுராணம, பதுமபுராணம், பிரமபுராணம், காந்தபுராணம், காளிகா புராணம், நாரத புராணம், வராக புராணம், வாயு புராணம், மச்சபுராணம், கூர்ம புராணம் ஆகியவை ஏகாதசி விரத நிர்ணயத்துக்கு ஆதாரமாகக் காட்டப்பெற்றுள்ளன. இத்தனை வடமொழிப் புராணங்களும் ஏகாதசி விரதத்தின் மகிமையைப் போற்றுகின்றன என்பதில் இவ்விரதத்தின் பெருமை நன்கு புலப்படுகின்றது.

### வடமராட்சியார்

### கொண்ட

### வற்றாத ஆர்வம்

வரத பண்டிதர் செய்த ஏகாதசி புராணத்தில் புலோலிப் பெரியார் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் அதிக ஆர்வம் கொண்டு அதனை ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்துள்ளார். பின்னர் சுப்பிரமணிய சாஸ்திரியார் அரும்பதவுரையோடு வெளியிட்டுள்ளார் அவருக்குப் பின்னரும் வடமராட்சியார் பல முறை இதனைப் பதித்து வெளியிட்டுள்ளார்கள். சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஒரு காலத்தில் பருத்தித்துறையில் இருந்தவாறு பன்முகமாகச் சைவத் தமிழ்ப்பணி புரிந்தபோது கந்தபுராணத்துக்கும் கற்றவர் புகழும் வண்ணம் கற்கண்டு போன்ற சுவையுடைய சொற்கொண்டு உரையெழுதியுள்ளார்.


## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

★ தாமதம் ★ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680


★ கிறீன்பீல்ட் சென் அந்தனிஸ் உதைபந்தாட்டம்

# விளையாட்டுப் பண்புக்கு எடுத்துக்காட்டான ஒருபோட்டி

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஏ பிரிவுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நிம்மதியாகக் கண்டுகளிக்க முடியாதவையாகவே இருந்து வருகின்றன. ஏச்சுக்களும் பேச்சுக்களும்; திட்டுக்களும் கெட்ட வார்த்தைகளும் வானிலே முட்டிமோதி எதிரொலிப்பதே வழக்கமாகிவிட்டது.

ஆனால் 22-7-84 ஞாயிறு நடந்த இறுதியாட்டம் பார்வையாளர் நிம்மதியாக இரசித்துப் பார்க்கக்கூடிய ஒன்றாக, சிறந்த விளையாட்டு மனப்பான்மையோடு விளையாடப்பட்ட ஒன்றாக இருந்தமை பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். வீரர்களும் இரசிகர்களும் இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன். ஒரு கெட்டவார்த்தை கூடப்பேசப்படாத போட்டியாக இது இருந்தது. பாராட்டப்பட வேண்டியவர்கள் பாஷையூர் மக்களும் வீரர்களுமே.

இப்போட்டி கிறீன்பீல்ட் கழகத்திற்கும் - சென். அன்ரனிஸ் கழகத்திற்குமிடையில் சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கிறீன்பீல்ட 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அக்கழகத்தின வரலாற்றில் முதற்றடவையாகச் சம்பியனாகியது பாராட்டப்படவேண்டிய ஒன்றே. தங்களுடைய மைதானத்தில் தோல்வி அடைந்த போதும் அன்ரனிஸ் வீரர்களும் ஆதரவாளர்களும் தோல்வியைச் சந்தோசமாக ஏற்றுக் கொண்டு அமைதியாக நடந்து கொண்டமை அவர்களுடைய பெருந்தன்மைக்கு அறிகுறியாகும்.

இன்னும் ஒன்றை நான் குறிப்பிட்டேயாக வேண்டும். ஏனெனில் அந்நிகழ்ச்சி மிகச் சிறந்த விளையாட்டுப் பண்பாட்டின் உச்சக்கட்டத்தைக் காட்டுவதாகும். இருகழகங்களும் தலா ஒருகோல் போட்டிருந்த இறுதிக்கட்டத்தில் கிறீன்பீல்ட் கழக வீரன் நந்தகுமார் அடித்த பந்து கோலுக்குள் சென்று விட்டது. நடுவர் துணைநடுவர்கள், வீரர்கள் பார்வையாளர்கள் எல்லோருமே 'கோல்' என்று நினைத்துக் கொண்டிருக்கையில் அவ்வீரனின் மனச்சாட்சி சரியாகப்பேசியது தான் அடித்த கோல், கோல் அல்ல- பந்து வெளிப்புறமாக உள்ளே சென்றது என நடுவரிடம் கூறிவிட்டார்.

இது ஒரு மிகச் சிறந்த பண்பு! அவ்வீரனுக்கு எனது பாராட்டுக்கள்!

வெற்றியும் தோல்வியும் அல்ல; பங்கு பற்றலே முக்கியம்! நீதியும் நேர்மையும் நன்மனச் சாட்சியும் நற்பண்பும், வீரமும் விட்டுக் கொடுத்தலும், நடுநிலைமையும் நடுவர் முடிவை ஏற்றலும் மைதானத்தில் வளராவிட்டால் பந்தயங்கள் அதோ கதிதான்!

முதற்றடவையாக சம்பியனாக வந்த கிறீன்பீல்ட் கழகத்தினர்க்கும் தோல்வியிலும் தங்கள் நற்பண்பைப் பிரதிபலித்த சென் அன்ரனிஸ் கழகத்தினர்க்கும் ஒரு சிறந்த ஆட்டத்தை நிம்மதியாகக் கண்டுகளிக்க உதவியமைக்காக பார்வையாளர்களின் சார்பில் எனது நன்றிகளும் பாராட்டுக்களும்!


சி. மே. மாட்டீன்
பயிற்சியாளா
யாழ். உதைபந்தாட்டச் சங்கம்


விளையாட்டு

# நினைவில் நிறைந்த அரசியலார் சிலர் — 3

# சேர் கந்தையா வைத்தியநாதன்

**1951-** ஆம் ஆண்டு அன்றைய பரமேஸ்வராக்கல்லூரியின் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பிரமாண்டமான பந்தலில் சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் தமிழ் விழா நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அனைத்து உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் உருவாகுவதற்கும் உலக நாடுகளில் தமிழுக்கு விழா எடுக்கவும் கால்கோளாக இருந்தது சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழகமே என்று சொன்னால் பொய்யாகாது.

பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அமைந்த பந்தலில் நடைபெற்ற தமிழ் விழாவுக்கு ஈடுஇணை கிடையாது என்றே சொல்லாம் இன்றுவரை அதுபோல் ஒரு தமிழ் விழாவை யாழ்ப்பாணத்து மக்கள் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகமே கண்டும் கேட்டுமிருக்க முடியாது இதனால்தான் இவ்விழா பற்றி கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி தமது சஞ்சிகையில் 'தெய்வ தரிசனம்' என்று எழுதினார் போலும்.

இந்தத் தமிழ்விழா தொடங்குவதற்கு முதல்நாள் பரமேஸ்வராக்கல்லூரி, இராமநாதன், கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபகரான சேர் பொன் இராமநாதனின் உருவப் படத்தை மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலிருந்து ஊர்வலமாகக் கொண்டு வந்தார்கள். சேர் பொன்னம்பலம் இராமநாதனின் உருவப்படத்துக்கு மாலை சூட்டி அவரைப்பற்றி உரைநிகழ்த்துவதற்குஉயர்ந்த பதவியிலுள்ள 'சேர்' பட்டம் பெற்ற ஒரு வரை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சேர் பொன். இராமநாதனின் உருவப்படம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டதும் ஏற்பாடு செய்யப்பட்டபடி அக்காலத்தில் மிக முக்கியமான அமைச்சின் நிரந்தரச் செயலாளராகவிருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் சேர் பொன் இராமநாதனின் உருவப் படத்துக்கு மாலை சூட்டினார் உரை நிகழ்த்தவேண்டிய பொறுப்பும் அவருடையதே,

அவர் தனது உரையை ஆரம்பித்தார் அந்த உரையைக் கேட்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து தமிழ் விழாவுக்காக வந்திருந்த கல்கி தூரன் மற்றும் டாகடர் மு.வ முதலிய அறிஞர்களும் உள்ளூர் அறிஞர்களும் திரண்டிருந்தனர்

சேர் பொன் இராமநாதனின் உருவப்படத்துக்கு மாலை சூட்டிய சேர் கந்தையா வைத்தியநாதன் தமது உரையை நல்ல முறையில்தான் ஆரம்பித்தார். ஆனால் தனது தொழில் பேச்சுக்கலையல்ல என்பதை உணர்ந்து சில நிமிஷங்களிலேயே தனது பேச்சை முடித்துக்கொண்டு அமர்ந்து விட்டார்

ஆனல் இதேசேர். கந்தையா வைத்தியநாதன் அரசியலுக்கு வலிந்து இழுக்கப்பட்ட பின் மேடைகளில் மணிக்கணக்கில் பேசினார்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதுடன் நின்று விடுகிறார்கள்; ''தீதும் நன்றும் பிறர் தரவாரா'' என்பதை மறந்து விடுகிறார்களே என்று மனம் நொந்து பேசி வந்தார்.

தமிழ் மக்களுக்கு வந்து சூழ்ந்த கேடுகளுக்கெல்லாம் அவர்களின் செயல்களேதான் காரணம் என்பது சேர் கந்தையா வைத்தியநாதனின் கருத்து

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் மிகச்சிறந்த மாணவனாக விளங்கிய வைத்தியநாதன் தனது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு இங்கிலாந்து சென்றார். அங்கு இலங்கை சிவில் சேவைப் பரீட்சையில் 1923ம் ஆண்டில் சித்திபெற்றார் கொழும்புக் கச்சேரியில் 1928ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் தேதி முதன் முதலாகப் பதவியேற்ற திரு வைத்தியநாதனின் நியமனத்தை அரசாங்க செயலாளர் வழங்கியிருந்தார்.

பொலிஸ் நீதிமன்ற நீதவானகவும் உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றிய திரு கந்தையா வைத்திய நாதன் 1931-ஆம் ஆண்டில் உள்நாட்டு அமைச்சின் நிரந்தரச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது சேர் பாரன் ஜயதிலகா உள்நாட்டு அமைச்சராக இருந்தார். திரு. வைத்தியநாதன் திறமைசாலியாக விளங்கியதுடன் மனிதப் பண்புடனும் நடந்துகொண்டதால் அமைச்சர்கள் அனைவரும் அவர்மீது நம்பிக்கையும் மதிப்பும் வைத்தார்கள். அந்நாளில் சிவில் சேவை அதிகாரிகள் தங்களுக்கு நிகர் எவருமில்லை என்ற இறுமாப்புடன் நடந்து கொள்வார்கள். இதற்கு எதிர்மாறாக திரு. வைத்தியநாதன் திகழ்ந்தார்

## டி. எஸ். ஸின் செயலாளர்

1932-ஆம் ஆண்டில் திரு. வைத்தியநாதன் காணி விவசாய அமைச்சரின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது பெரிய சேனநாயகா என்று அழைக்கப்பட்ட திரு டி எஸ் சேனநாயகா காணி விவசாய அமைச்சராக இருந்தார்

இதன் பின் திரு கந்தையா வைத்தியநாதன் தமது கடமைகளுடன் அரச சபையின் பதில் லிகிதராகவும் அமைச்சரவையின் செயலாளராகவும் பணியாற்றினார். 1936-ம் ஆண்டில் போக்குவரத்து வேலைகள் அமைச்சின் செயலாளராக திரு வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார் சேர் ஜோன் கொத்தலாவலை தான் அமைச்சர். அமைச்சரின் எண்ணங்களைச் செயலாக்கிப் பெயரும் புகழும் ஏற்படுத்தியவர் திரு வைத்தியநாதன்

இதற்கு நன்றிக்கடனாகவோ அல்லது திரு. வைத்தியநாதனின் அறிவும் ஆற்றலும் நாட்டுக்குப் பயன்படவேண்டுமென்ற நல்ல நோக்கமோ சேர் ஜோன் பிரதமராக வந்ததும் சேர் கந்தையா வைத்தியநாதனை வீடமைப்பு சமூக சேவைகள் அமைச்சராக நியமித்து அரசியலுக்கு இழுத்து விட்டார்.

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமானதும் திரு. வைத்தியநாதனின் சேவை அரசுக்கு அதிகம் தேவைப்பட்டது. திரு வைத்தியநாதன் 1939-ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தகவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார் இப் பதவியுடன் உதவிப்பாதுகாப்பு ஆணையாளராகவும் நியமனம் பெற்றார்.

1942-ஆம் ஆண்டில் திரு. வைத்தியநாதன் இந்தியாவில் இலங்கையின்விநியோக ஆணையாளராக நியமிக்கப்பட்டார். 1945-ஆம் ஆண்டில் உணவு ஆணையாளராக நியமிக்கப்பட்டார்

யுத்த கலவரத்தில் இந்நாட்டில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு இந்தியாவில் சேர் வைத்தியநாதனிடம் விடப்பட்டிருந்தது.

## எஸ். எம். ஜி.

யுத்தம் முடிவடைந்த பின் 1947-ஆம் ஆண்டில் சேர் கந்தையா வைத்தியநாதன் மத்திய மாகாண அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில்தான் பொது வேலை நிறுத்தத்திலீடுபட்டு வழிநடத்தியதற்காக திரு. ரி. பி. இலங்கரத்தின அரசாங்க சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

1947-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சேர் கந்தையா வைத்தியநாதன் பாதுகாப்பு

(10-ம் பக்கம் பார்க்க)

## வாரம் ஒரு சந்திப்பு

# வளர்ந்து வரும் வில்லிசைக் கலைஞர் கணேசமூர்த்தி

நம்மோடு வாழ்ந்து மறைந்த 'மஹாகவி'யின் கவிதைக்குள் நுழைந்தால், ஏதோ ஒரு இன்பத்தினுள் திளைத்த உணர்வுதான் ஏற்படும்! அவரது 'கண்மணியாள் காதை'யை நூலாக்கிய 'சசிபாரதி' தான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி, அவர் எழுத்துக்களை என் இதயத்தோடு உறவாட வைத்தார்!

'கண்மணி'யாளை நூலாக்கியதோடு மட்டுமல்லாது, லடீஸ் வீரமணியின் வில்லிலை அந்தக் 'காதை'யை ஒலிக்கவும் செய்தார் இலக்கிய நெஞ்சம் கொண்ட என் அருமை 'சசிபாரதி'.

லடீஸ்' வில்லைத் தொட்டால் கதை தானகவே சொல்லும் என்பதா, அல்லது 'மஹாகவி'யின் 'காதை'யை அவர் பாட்டிசைத்ததால்தான் அந்த வில்லு நாதம் செய்ததா என்பது வேறு விஷயம்.

லடீஸும் தமிழ்நாட்டில் குடியேறிவிட்டார்!

'கண்மணியாள் காதை'யை மீண்டும் வில்லுப்பாட்டாகக் கேட்கமுடியாதா என்று நான் ஏங்கியதுண்டு.

அந்தக் குறையைத் தீர்த்து வைத்தார் இளைஞர் ஒருவர்.

வயதில் மிக இளையவராக இருந்தாலும், வில்லிசைப்பதில் அவரிடம் ஒரு பக்குவம் இருக்கிறது.

நாச்சிமார் கோவிலடி ராஜன் வில்லிசைக் குழுவை இயக்கும் அந்த இளைஞர் தம்பையா கணேசமூர்த்திக்கு இருபத்தொரு வயசுதான்! இவரது அண்ணன் ராஜன் ஆரம்பித்த வில்லிசைக்குழுவில், ராஜன் வில்லிசைத்துப் பாடினர். அப்போது பக்கப் பாட்டுக்கு இருந்தார் கணேசமூர்த்தி. அவர் வெளிநாடு போனபின் தானே இப்போது வில்லில் கதை சொல்கிறார்!

'கண்மணியாள் காதை'யின் சில பகுதிகளை அவரின் குரலில் கேட்டேன்.

### உயிர் கொடுக்கிறார்

'மஹாகவி'யின் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கிறார்! லடீஸிடம் உள்ள வயது முதிர்ச்சியில்லாவிட்டாலும், கணீரென்ற குரலில் கணேசமூர்த்தி காதையைச் சொல்லுவதில் தனக்கென்றோர் தனித்துவமுத்திரையைப் பதித்து விடுகிறார்!

●

ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோதே நாடகங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார் கணேசமூர்த்தி!


நாச்சிமார்கோவிலடிக் குளக்கரைப்பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது இந்த நடிப்புச்சந்தர்ப்பம் கிடைத்தது!

சிறுவனாக இருந்தாலும், அப்போது பிரபலமாக இருந்த கலைவாணர் நாடக மன்றத்தின் 'இடிந்த கோவில்' நாடகத்தில் 'கபாலி' என்ற வேலைக்காரப் பாத்திரத்தில், நடித்து பலரது அபிமானத்தையும் பெற்றார்.

சின்னமணி, பற்குணம், வண்ணைத்தியாகன் போன்றவர்கள் அப்போது கலைவாணர் குழுவில் பிரபலமானவர்கள் லோகநாதன் தான அந்த நாடகத்தை இயக்கியவர்; இவர்களின அன்பைச் சம்பாதித்தார்!

சின்னமணியின் அண்ணன் நவரத்தினம் பல இடங்களில் சிறுவன் கணேசமூர்த்திக்கு இடமளித்தார்.

இவரது குரல்வளத்தை வடக்கின் பிரபல வில்லிசைக் கலைஞர் சின்னமணி புகழ்ந்தார்.



பதினொரு வயதிலிருந்து பதினைந்து வயதுவரை வானொலியில் 'சிறுவர் மலர்' இவரை வளர்த்தது.

வானொலிமாமாவாக அப்போது இருந்தவர் லலித கலைஞர் வி. ஏ. சிவஞானம் அப்போது 'கட்டியக்காரன்' என்ற 'பாட்டும் கதையும்' நிகழ்ச்சியை இவர் செய்தார். உயிர் கொடுத்துப் பாடுகிறார் என்ற பலரின் பாராட்டையும் பெற்றார்!

நாடக மேடைப் பாடல்களைப்பாடும் போது கணேசமூர்த்தியின் திறமையைக் கண்டு சிவஞானம் வானொலிக்கு அழைத்துச் சென்றார்!

●

இவர் அண்ணன் ராஜன் தான் வில்லுப்பாட்டுச் செய்தார்.

நாச்சிமார் கோவிலடியில் ராஜன் வில்லிசைக்குழு தனிப் பெயருடன் விளங்க வைத்தவர் ராஜன்!

ராஜன் வெளிநாடு போனதும், கலைஞர் பற்குணம் கதை சொல்லி வில்லிசைப்பார்! குமரன் மாஸ்டரும் பக்கக் கதை சொல்லுவார்.

இதன்பின்னர் கணேசமூர்த்தியே வில்லிசையைச் செய்ய ஆரம்பித்தார்!

### வில்லுப்பாட்டு பட்டியல்

குருதட்சணை
பாலனை அறிந்த பரஞ்சோதி
சிலம்புச்செல்வி
பாரதியார்
கைகொடுத்த கண்ணன்
கந்தன் கருணை
சகுந்தலா

— இந்த வில்லுப்பாட்டுக்களை பல இடங்களை நிகழ்த்தி விட்டார் கணேசமூர்த்தி!

'கண்மணியாள் காதை' இவருக்குப் பிடித்தது.

வானொலியில் இவரை வில்லிசைக்கவைத்த லலித கலைஞர் வி. ஏ சிவஞானத்தை மறக்காது மனதில் வைத்திருக்கிறார். இப்போது அந்தப்பகுதிகளுக்குப் பொறுப்பாகவுள்ள கனகசபாபதி நாகேஸ்வரனையும் நினைவு கூர்கிறார்.

இவரது வில்லிசைக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் எல்லாரும் இவரைப்போலவே இளைஞர்கள்.

இவர் தம்பி கருணாகரன். அருச்சுணன் பூபால சிங்கம், பிலிபஜோன் கவாஸ், சதா வேல்மாறன் ஆகியோரின் திறமையும் தனது வெற்றிக்குக் காரணம் என்கிறார் இவர்.

''சின்னமணி, ஆர்மோனியம் பிலிப்ஜோன் கவாஸ், சிரித்திரன் சுந்தர். ஆரம்பத்தில் ஆர்மோனியம் இசைத்த சரவண முத்து, வானொலிக் கலைஞர்கள் போன்றோரையும் என்னால் என்றும் மறக்கமுடியாது' என்று கூறுகிறார் இந்த இளம் கலைஞர் கணேஷமூர்த்தி.

நகைச்சுவையோடு நல்ல பல கருத்துக்களை சமுதாயத்திற்கு சொல்லி. விளங்கவைக்கக் கூடிய வில்லிசையை உயிராக நேசிக்கிறார் இவர் என்பதனை இவர் என்னைச் சந்தித்துப் பேசிய ஓரிரு மணித்தியாலங்களுக்குள் உணரக் கூடியதாக இருந்தது

வில்லிசையை பல இடங்களிலும் செய்துகொண்டு வரும் இவர், வில்லிசைபற்றி கேட்டு அறிந்து மாற்றங்களைச் செய்துகொள்வதற்கு எப்போதுமே தயாராக இருப்பது இவரது அடக்கமான பண்பு.

ஈ. கே. ஆர்.

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம் ஆடி
திகதி 28 (12-08-1984)
திதி பிரதமை முன்
இரவு 10-45வரை
நக்ஷத்திரம் அவிட்டம்
முன் இரவு
7-49 வரை

### மேஷம்

உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவார்கள். கணவன் மனைவியரிடை பூசல்கள் உருவாகும். தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். போட்டி விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும். பொறுமையைப் பேணவும். இவ்வாரம் கந்தனைத் தோத்திரம் செய்க.

### ரிஷபம்

குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம். எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வீர்கள். சாந்தம் சிறப்பைத் தேடித் தரும் இவ்வாரம் பெண்கள் அவதானம் வேண்டும். காதல் ஜோடிகளுக்கு ஏக்கத்தின் தாக்கம் ஏற்படும். சித்திதரு பத்திர காளி அம்மனை வழிபடுக

### மிதுனம்

ஏக்கத்தின் சாயல் நிழல் போலத்தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வேதனையைத் தரும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும். முதியவர் ஒருவர் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார் பெண்களுக்கு மத்திமமான வாரம். வணிகர்களுக்கு வரவில் திருப்தியுண்டு. காதல் ஜோடிகளுக்கு கனிவான சம்பவங்கள இடம் பெறும். தக்ஷிணாமூர்த்தியை வழிபடவும்.

### கடகம்

எதிலும் விரக்தி மனப்பான்மை உருவாகும். வேண்டாத நடவடிக்கையின்மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். வணிகர்களுக்கு இவ்வாரம் எதிலும் அவதானம் வேண்டும். காதலர் மததியில் மனத்தளர்ச்சி ஏற்படும் பொறுமைவேண்டும். முருகப்பெருமானை வழிபடவும்.

### சிம்மம்

கொள்கையில் அதிகபற்று ஏற்படும். இனசனக்கொண்டாட்டங்களுக்கிடமுண்டு. களஸ்த்திரவழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு. பெண்களுக்குக் கடமையில் அதிகம் கவனம் வேண்டும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். அர்த்தநாரீஸ்வரரை வழிபடவும்

### கன்னி

என்னதான் திறமைசாலியாக இருந்தபோதிலும் இவ்வாரம் கோட்டைவிட நேரிடலாம். முகமன்பேசுவோரிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். பெண்கள் இவ்வாரம் ஒருவருடன் பகைத்துக் கொள்ளநேரிடும். பொறுமை வேண்டும். காதலர்கள் மத்தியில் கசப்புக்கள்தோன்றும். கவனம்வேண்டும். பெருமாள் பெருமானை வழிபடவும்.

### துலாம்

குடும்பத்தில் இனிமை தவழும் உறவினர்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். உவகை தரும் சம்பவங்கள் இடம் பெறும். காரியசித்தியும் கிட்டும, நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்களாவர். காதலர்கள் அடக்கம் வேண்டும். சனீஸ்வரனை வழிபடவும்.

### விருச்சிகம்

பொறியியலாளர்களுக்குப் பொன்னனவாரம். புகழும் பொருளும் மலிவதற்கான சந்திர்ப்பம் உண்டு, வந்துசேர வேண்டிய பணம் சேர்வதில் மீண்டும் தடை ஏற்படும். பெண்கள் அவசரப்போக்கைத் தவிர்த்துக் கொள்ளவும். காதலர்களுக்கு கவர்ச்சியான வாரம் வணிகர்களுக்கு இவ்வாரம் அவதானம் வேண்டும். துர்க்கையம்பாளை வழிபடவும்.

### தனுசு

தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும். மூத்தோர் உதவிக்கு இடமேற்படும். சிலருக்குத் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு. மகாவிஷ்ணுவை வழிபடநன்று.

### மகரம்

கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள். பொறியியலாளர்களுக்குப் பொன்னன வாரம் வேண்டிய ஒருவரிடமிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும். பெண்களுக்குப் பொறுமை அவசியம். காதலர்களுக்குப் பொறுப்பான வாரம். தக்ஷிணாமூர்த்தியை வழிபடல்வும்.

### கும்பம்

செலவுக்குவேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். பெண்களுக்கு இவ்வாரம் சிறப்பான அசம் இடம்பெறும். வணிகர்களுக்கு எதிர்பார்த்த விடயம் வெற்றியைத் தரும். விவசாயிகளுக்கு நிலைமை சீர்பெறும். சுப்பிரமணியரை வழிபடவும்.

### மீனம்

நத்தைவேகத்தில் காரியங்கள் நகரும். மனத்தளர்ச்சியை தவிர்க்கவும். வேண்டாத தொடர்பை விலக்கவும். மனத்திடம்வேண்டும். கல்வித்துறையில் ஈடுபடுவோர் ஊக்கமெடுக்கவும். சனீஸ்வரனை வழிபடவும்.

**திருமலை.க.வே.ரவீந்திரன்**

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

1979 ஆம் ஆண்டு, எந்த மாதம் என்று நினைவில்லை.

நூற்றுஎண்பத்தெட்டு மணி நேரம் கொழும்பு விக்டோரியா பூங்கா, நகர மண்டபத்தைச் சுற்றி விடாது சைக்கிள்சவாரி செய்தார். இந்த நாட்களில் அங்கு முகாமிட்டு நண்பர்களோடு சைக்கிளில் ஓடி உற்சாகப்படுத்தி, அவர் உடல் நிலை குறித்துக் கவனமெடுத்த அந்தக் காலம் மீண்டும்வரப்போகிறதா?

அப்போது ஆயிரத்து நானூற்று எண்பத்து ஆறு மைலகள் ஓடிச்சாதனை புரிந்தார்!

'கின்னஸ்' புத்தகத்தில் இந்தச்சாதனை இடம்பெற்றது.

இன்னொரு சாதனை—

காலிமுகத்திடலில் நூற்று இருபத்துஎட்டு மணித்தியாலங்கள் 'டுவிஸ்ட்' நடனமாடினார்!

மற்றொன்று—

கொழும்பு என். ஸி. ஸி. மைதானத்தில் நூறறுநாற்பத்தேழு மணி நேரத்திற் இருநூற்றுஅறுபதுமைல் நடந்தார்!

வேறொன்று—

136 மணிநேரம் பந்தைத் தொடர்ந்து அடித்தார்!

தமிழ் நாட்டிலும் அவர் சாதனை புரிந்தார். அப்போது நான் லண்டனில் இருந்தேன். சாதனையில் இறங்குவதற்கு முன்னதாக அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

தமிழகத்து அண்ணா நீச்சல் தடாகததில், 'தவளையாக' நீந்தினார்— ஒன்றிரண்டு மணி நேரமல்ல, எண்பது மணி நேரங்கள்!

—'கின்னஸ்' சாதனையான இது 1981ல் நிகழ்ந்தது.

ஏழு 'கின்னஸ்' சாதனைகளைச் செய்திருக்கிறார்!

"சாகும்வரை சாதனை செய்துகொண்டே இருப்பேன்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த ஆழிக்குமரனை முடித்துக்கட்ட நிகழ்ந்த அந்த விபத்தில் எப்படியோ தட்பிப்பிழைத்தார்!

லண்டனிலிருந்து திரும்பிய நேரத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து அவரைக் கொழும்பு போய்ச்சந்திப்பேன்

ஊன்று கோல்களுடன் அவர் நடந்து வரும்போதெல்லாம் எனக்கு ஒரேகவலை.

"ஆங்கிலக் கால்வாயை நீந்தாமல் நான் சாகமாட்டேன்" என்று அடிக்கடி என்னிடம் உறுதியாகச் சொல்லுவார்

அவரது உடலையும், இடது காலையும் இணைத்து வைத்திருப்பது ஒரு 'பிளேட்' என்ற ரகசியத்தையும் அவர் என்னிடம் சொன்னார்.

## வீரகாவியம் ...

எப்படித்தான் ஓராண்டு காலத்தைப் படுக்கையில் கழித்தாரோ?

கொழும்பில் அடுத்தடுத்து மூன்று நாள் 'ஆழிக குமரன் ஆனந்தனோடு ஒரு மாலைப் பொழுது' என்ற பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சியை நடத்தினோம்.

ஆழிக்குமரன் சிறந்த பல மொழிப்பாடகர் என்பதை நிரூபித்தார்! அவர் ஒரு ஈழத்தின் மறக்கமுடியாத இசைக் கலைஞர் என்பதனை அப்போது பலரும் தெரிந்துகொண்டனர்!

விபத்துக்குப் பின்னர் கடைசி 'கின்னஸ்' சாதனையை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தினார்.

1983ம் ஆண்டு, ஆனந்தனின் புதிய சாதனையுடன் தான் பிறந்தது.

இளைஞர்கள் அருள்செல்வமும், 'பரடைஸ்' சண்முகராசாவும் சேர்ந்து யாழ். திறந்த வெளி அரங்கில் ஏற்பாடு செய்த இந்தச் சாதனை நிகழ்ச்சிக்கு ஆயிரக்கணக்கானோர் விடிய விடியத் திரண்டிருந்தனர்! இரண்டாயிரத்து ஐந்நூற்றி இருபது தடவை 'பிலியட்ஸ்' தடியை ஆனந்தன் விரல்களில் வைத்து மேலும் கீழும் உயர்த்தி உலக சாதனையை நிகழ்த்தினர்.

இதன் மூலம்,

கால்வலு விழந்து, சாதனை செய்யச்சக்தியற்றவராகச் சில காலம் வாழ்ந்த ஆழிக்குமரன்,

மீண்டும் சாதனையாளரானர்!

மனம்விட்டு...

மனம்விட்டுப் பல சொந்த விஷயங்களைக்கூடப் பேசும் அவர், எந்நேரமும் நண்பர்களுடன்தான் இருப்பார்! அவரை நம்பி வாழ்ந்த சிலரை எனக்குத் தெரியும். அவருக்குக்கொடுத்துத்தான் பழக்கம், யாருக்கும் சொல்லமாட்டார்!

இங்கிலாந்திலிருந்து மன வேதனையோடு அவர் எழுதிய சில கடிதங்கள் என் உள்ளத்தை நொருக்கிக்கொண்டே இருக்கின்றன!

மனைவி மானில், இரண்டு ஆண் குழந்தைகளை விட்டுச் சென்றுள்ள முப்பத்தொன்பது வயது ஆனந்தன்—

இலங்கைத் தமிழர்களின் சொத்தாக என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்!

## சேர் கந்தையா

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வெளி விவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சுதந்திரத்தின்பின்...

1948-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் தேதி இலங்கை சுதந்திரமடைந்கதும் சேர் கந்தையா வைத்தியநாதனின் பணி சிறப்பு மிக்கதாய் அமைந்தது. இலங்கையின் வெளிநாட்டுச் சேவையையும் இராணுவ அமைப்பையும் உருவாக்குவதில் அவர் சிறந்த பணிபுரிந்தார்.

(மிகுதி அடுத்தவாரம்)

## கடல்கோட்டை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

திசைவீரசிங்கனின் உள் மனம் எதையோ வேண்டியது. ஆம் வைஸ் கமாண்டர் பிகாரோ அவனுக்குச் செய்த அவமானத்திற்குச் சரியாகப் பழி வாங்க வேண்டும் என்று அவன் உள்மனம்கூச்சலிட்டது, அவன் நாக்கில் சனிகுடி கொண்டது. தற்செயலாக நிமிர்ந்து பார்த்தபோது சற்றுத் தூரத்தில் வைஸ் கமாண்டர் பிகாரோவின் இளம் மனைவி சோகமே உருவாக நிற்பது தெரிந்தது. அவன் மனதில் ஆவலைமூட்டிய பெண். அவள் இன்று ஒருவிதத்தில் விதவை,

அவளை அடைவதன் மூலம் தன்னை அவமானப்படுத்திய பிகாரோவை நன்ருகப் பழி வாங்கிவிடமுடியும் எனத்திசை வீரசிங்கன் எண்ணினன்

"கேட்டால் தருவீர்களா, துரை அவர்களே...?"

"நிச்சயமாக..."

எனக்குப் பிகாரோவின் மனைவியைப் பரிசாகத் தாருங்கள்.."

ஒரு கணம் வன்கோயனின் முகம் கனன்று தணிந்தது. தன்னைச் சமாளித்துக்கொண்டான் அவன். சென்ற இரவு அவள் அவனுடன் ஒரேகட்டிலில் துயினறவள். தன் கோபத்தை அடக்கிக்கொண்ட அவன், அதுவெளியே தெரியாமல் இருப்பதற்காக பெரிதாக சிரித்தான்.

"முதலியார்... போயும் போயும் இந்தப் பெட்டை நாய்க்கா ஆசைப்பட்டீர்..? உமக்கு எத்தனை பெரிய பரிசுகளைத்தர நான் காத்திருந்தேன். இந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் இராச வாசல் முதலியாராக உம்மை நியமிக்கவிரும்பினேன். எனது பிரதம ஆலோசகனுக உம்மை வைத்திருக்க விரும்பினேன்.. போகட்டும் நீர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் உமக்கு இந்த இராச்சியத்தின் இராச வாசல் முதலியார் பதவியை நான் தரப்போகிறேன் நாளை பத்தேவியாவிற்குப் புறப்படவிருக்கும் நாவெடன் கப்பலில் நீரும் அங்குபோகிறீர் அங்கு எமது இராசப் பிரதிநிதியிடம் நேரில் ஆசீர்வாதம் பெற்று வரப்போகிறீர். அதன் பின்னர் நீர்விரும்பிய அனைத்தும் உமக்குக்கிடைக்கும். ஒல்லாந்தரின் ஆட்சி இங்கு நிலைபெற உதவிய உமக்கு எமது பத்தேவியாவிலிருக்கும் இராசப்பிரதிநிதியே பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பார். உம்மைப் பற்றிய அறிக்கையுடன் நாளை நீர் பத்தேவியா பயணமாகிறீர்..."

வன்கோயன் கூறியபடி திசைவீரசிங்கன் கப்பலில் புறப்பட்டான் அவன் வைத்திருந்த அறிக்கை ஒல்லாந்த மொழியில் எழுதப்பட்டிருந்தது

அந்தமொழி மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தால் அதில் அடங்கியிருக்கும் பயங்கரத்தை அவன் புரிந்துகொண்டிருப்பான். [வளரும்]

## மாம்பழத்துக்கு வயது 4000

இது மாம்பழம் விளையும் பருவம். எனினும், இந்த ஆண்டு போதுமான அளவு மாம்பழம் கிடைக்கவில்லை பருவம் தவறிய மழையே இதற்குக் காரணம் என்கின்றனர். விரும்பிய அளவு மாம்பழம் கிடைக்காவிட்டாலும், மாம்பழம் பற்றிய பலசுவையான செய்திகள் கிடைக்கின்றன.

மாம்பழச் சாகுபடி கடந்த 4000 ஆண்டு காலமாக இந்தியாவில் நடைபெற்று வருகிறது. மாம்பழம் தோன்றியதே இந்திய-பர்மாஎல்லையில் தான் பிறகுதான் உலகின் வேறு சில பகுதிகளுக்கும் பரவியது

சீனயாத்திரிகர் யுவான் சுவாங் கி. பி 7ம் நூற்றுண்டில் இந்தியாவில் சுற்றுப் பயணஞ் செய்தபோது மாம்பழத்தைப் பார்த்திருக்கின்றனர். தனது பயணக் குறிப்புக்களில அதைக் குறித்து எழுதியியுள்ளனர் வெளிநாட்டுப் பயணிகளில் மாம்பழத்தைப்பற்றி எழுதிய முதல் வெளிநாட்டுக்காரன் யுவான்சுவாங் தான்.

மாம்பழத்தில் 1000வகைகள் உண்டு. ஒட்டுவகை மரம்பழங்கள் 10 ஆண்டு காலம வாழும். 5 முதல் 40 ஆண்டுகள் வரை நல்ல விளைச்சல் இருக்கும்,

இந்தியாவில் பழச் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பில் 9.42 560 ஹெக்டா நிலத்தில் மாம்பழ வேளாண்மை நடைபெறுகிறது

மாம்பழத்தில் விட்டமின 'ஏ'யும், 'சி'யும் இருப்பதால் சத்துள்ள உணவாகவும் திகழ்கிறது. ஆதாரம்:ஸ்ரீகுமரகுருபரர்

தொகுப்பு

க. கனகராசா ச. நீ.

## தொண்டர் சேவை

(வண்ணுர்பண்ணே)

இம்மாதம் 2ம் திகதி ஆரம்பமான பாடற் புகழ்வாய்ந்த ஈழநல்லூர்க்கந்தன் வருடாந்த உற்சவத்தில் தினமும் நூற்றுக்குமதிகமான தொண்டர்கள் இம்முறை சேவையில் ஈடுபட்டுள்ளனர். சென்ற வருடம் போல் இம்முறையும் பொலிஸ் பாதுகாப்புக்களின்றி உற்சவங்கள் பந்தோபஸ்தாகவும், சிறப்பாகவும் பக்தி அமைதியுடனும் நடைபெற்றுவருகின்றன.

யாழ். மாவட்ட இந்து இளைஞர்பேரவைத் தொண்டர்கள் நூற்றுக்கணக்கானேர் உள் வீதியிலும் வெளியிலும் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, சாரணர் இயக்கம், யாழ் மாநகரசபை ஆகியவற்றின் தொண்டர்களும் இம்முறை அதிக அளவில் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30, 4-30 — 7-00
**Eye For An Eye**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
முத்துராமன்-காஞ்சனு
**காதலிக்க நேரமில்லே**
(ஈஸ்மன் கலர்- புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
**பொண்ணுக்கு தங்கமனசு**

**மனேகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
தவிகா
**சரஸ்வதிசபதம்**

**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer ... in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

**லிடோ** யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7-15
THE BURNING
(Strictly for Adults)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்-லதா நடித்த
**நவரத்தினம்**
(ஈஸ்மன் கலர்)


## பெரியபுராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வயல் வேதவனம் பிள்ளையார் கோவில் பெரியபுராண படிப்பும் பயன்சொல்லும் வைபமும் இன்று மாலை ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய வைபவத்தை சிவஸ்ரீ கி. கே. சோமசுந்தரக் குருக்கள் ஆரம்பித்து வைப்பார். புராண பயனத்தை அருட்கவி சி. விஞசித்தம்பி, பண்டிதர் க. வேலுப்பிள்ளை, கல்வயல் குமாரசாமி, த. வேலுப்பிள்ளை ஆகியோர் ஒதுவார்கள், (கெ)

## நல்லூர் ஆலயத்தில் இரத்ததான இயக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் றேட்டரிக் கழகத்தின் இரத்ததான இயக்கம் நேற்று நல்லூர் கந்தசாமி கோவில் ஆலயச் சுற்ருடலில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அடிக்கடி ஏற்பட்டுவரும் இரத்த வங்கிக் குறைபாட்டை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாண றேட்டரிக் கழகம் இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் இம்மாதம் 22ம் திகதி முதல் 26ம் திகதிவரை இரத்த சேமிப்பு வங்கி ஆலய சுற்றுடலில் முழுமையாக இயங்கும். (கெ)

## பாடசாலேக்கு மின்இணைப்பு

[வண்ணுர்பண்ணே]

தொல்புரம் மத்தி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலேக்கு இப்பகுதி பொதுமக்களது உதவியுடன் மின்சார இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலே அதிபரதும், பொதுமக்களதும், பாடசாலே அபிவிருத்திச் சங்கத்தினதும் முயற்சியால் இந்த மின் இணைப்புக்கான நிதி திரட்டப்பட்டது.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பிரஸ்தாபித்துக் காட்டுவதற்காகவே வடபகுதித் தீவிரவாதிகள் இப்பொழுது நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என்றும் அத்துலத்முதலி கூறுகிருர்.

இந்தியாவில் தேசியபொதுத் தேர்தல் மிகவிரைவில் நடைபெறவிருப்பதால் அதில் சுயலாபம் தேடுவதற்காக தீவிரவாதிகளின் முயற்சிகளுக்கு சில அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்குகிருர்கள் என்று அவர் கூறினர். (திவயன)


## ★ ஒலிம்பிக்

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 61 | 50 | 21 |
| ருமேனியா | 17 | 13 | 10 |
| சீனு | 14 | 7 | 7 |
| மே. ஜேர்மனி | 11 | 14 | 17 |
| இத்தாலி | 11 | 3 | 7 |
| கனடா | 7 | 10 | 9 |
| ஜப்பான் | 7 | 7 | 10 |
| ஆஸ்திரேலியா | 4 | 8 | 11 |
| பிரிட்டன் | 4 | 6 | 18 |
| பின்லாந்து | 4 | 3 | 11 |
| பிரான்ஸ் | 4 | 3 | 6 |
| நியூஸிலாந்து | 4 | 0 | 2 |
| தென் கொரியா | 3 | 4 | 2 |
| நெதர்லாந்து | 3 | 2 | 4 |
| யூகோஸ்லாவியா | 2 | 1 | 2 |
| பிரேஸில் | 1 | 3 | 2 |
| மெக்ஸிக்கோ | 1 | 2 | 1 |
| பெல்ஜியம் | 1 | 1 | 2 |
| ஆஸ்திரியா | 1 | 1 | 1 |
| ஸ்பெயின் | 1 | 1 | 0 |
| மொரொக்கோ | 1 | 0 | 0 |
| சுவீடன் | 0 | 4 | 5 |
| சுவிற்சர்லாந்து | 0 | 2 | 2 |
| டென்மார்க் | 0 | 1 | 2 |
| நோர்வே | 0 | 1 | 2 |
| கிரேக்கம் | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| ஐவரிகோஸ்ட் | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| ஜமேக்கா | 0 | 0 | 1 |

## பி. ரி. உஷாவுக்கு இந்திரா ஆறுதல்

ஒலிம்பிக் மகளிருக்கான 400மீட்டர்கள் தடை தாண்டி ஓட்டப்போட்டியில் 4வது இடத்தைப் பெற்ற இந்திய வீராங்கனை பி. ரி. உஷாவுக்கு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆறுதல் தெரிவித்துள்ளார்.



"கடுமையான போட்டியின்பின் தோல்வியடைவதும் வெற்றிக்குச் சமமானதாகும். பதக்கம் பெறத் தவறியதால் உங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தில் நாமும் பங்குகொள்கிறேம்" என்று திருமதி காந்தி தமது ஆறுதல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## 88வது ஒலிம்பிக்கில் ஆர்வம்

லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டித் தகவல்களை சேகரித்துவரும் சோவியத் பத்திரிகையாளர்கள் தெ. கொரியாவில் 1988ல் இடம்பெறவிருக்கும் 24-வது ஒலிம்பிக் பந்தயங்கள் குறித்து அதிக ஆர்வங்காட்டுகின்றனர். என்று தெ. கொரிய செய்திஸ்தாபனமான 'யொன்ஹப்' தெரிவித்துள்ளது.

கம்யூனிஸ்ட் நாடுகளுடன் தெ. கொரியா ராஜதந்திரதொடர்புகளைக் கொண்டிராதபோதிலும் 24-வது ஒலிம்பிக் போட்டிகளுக்கு கம்யூனிஸ்ட் நாடுகள் உட்பட சகல நாடுகளையும் அது வரவேற்கின்றது.

லாஸ்ஏஞ்சல்ஸில் சோவியத் பத்திரிகையாளர்கள் தென்கொரியாவின் 'யொன்ஹப்' செய்தி நிறுவன காரியாலயத்துக்குச்சென்று 24வது ஒலிம்பிக் ஏற்பாடுகள் குறித்து கேட்டுத் தெரிந்து கொண்டனராம். (கி)

செய்திகள் ★

## நடப்பு

வெளிநாடு செல்ல விரும்பும் ஒருவர் 'கடவுச்சீட்டு' (பாஸ்போர்ட்) எடுக்கவேண்டுமானல் பல்வேறு கண்டங்களைத் தாண்டவேண்டும் என்பது பலருக்கும் தெரிந்த உண்மை.

எனினும் இவ்விடயத்திற்குரிய நெளிவு சுழிவுகள் தெரிந்தவர்களுக்கு இது ஒரு 'சிம்பிள்' வேலே.

இத்துறையில் 'நிபுணத்துவம்' பெற்றவர்களிடம் ஆயிரக்கணக்கில் 'சுளை சுளை'யாகச் சிலநோட்டுகளை எண்ணிவிட்டாலோ அந்தச் சுளையின் பெறுமதிக்கேற்றவாறுசிலநாட்களிலோ ஓரிரு நாட்களிலோ வீட்டிலிருக்கப் 'பாஸ்போர்ட்' கைக்கு வந்துவிடும்!

முதலில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான 'பாஸ்போர்ட்'டை எடுத்துவிட்டால் பின்பு இலகுவில் சர்வதேச (All Countries) 'பாஸ்போர்ட்' ஆக்கிவிடலாம் என யாரோ சிலர் கொடுத்த 'ஐடியா'வின் பலாபலன் போலும் 'மிடில் ஈஸ்ட்' பாஸ்போர்ட்டுடன் பாஸ்போர்ட் அலுவலகத்தின் முன் தினமும் நீண்ட வரிசையில் மக்கள் கூட்டம் அலேமோதுகிறது.

பாஸ்போர்ட்டை புதுப்பிக்க அதில் பதவியை மாற்ற- சர்வதேசத்துக்குமாக மாற்ற- பிள்ளைகளைச்சேர்த்துக்கொள்ள- இவ்வாருக என்ன மாற்றங்கள் செய்ய வேண்டுமாஞலும் அங்கு எல்லோரும் ஒரே வரிசையிலேயே செல்லவேண்டும். முதலில் தமது தஸ்தாவேஜுகளைச் சரிபார்க்கும் அதிகாரிகளிடம் சமர்ப்பித்து அவர்களின் 'ஓகே' கையொப்பம் பெற்றதும் அவற்றைக் கையளிக்கவெனத் தனித்தனியாக உள்ள நான்கு வரிசைகளில் ஒன்றில் ஊர்ந்து சென்று தஸ்தாவேஜுகளை ஒப்படைத்துவிட்டு அவற்றுக்குரிய 'கார்டு'களை பெற வேண்டும்.

காலே 9மணி முதல் பகல் 12மணிவரை அவற்றைச்சமர்ப்பிக்க முடியும் என்று அங்குள்ள அறிவித்தல் கூறினலும், 9 மணி முதல் 9-30 வரை எநநேரமும் திறக்கப்படும் அங்குள்ள திருக்கதவு, 11-30 முதல் 12மணிவரை எந்நேரமும் சாத்தபபடுகிறது

இதனிடையே வீரமுடன் இடித்துக்கொண்டும் அங்குகடமையிலுள்ள பொலிசாரை ஏமாற்றிவிட்டும்முதலில் நுழைபவர்களசில நிமிடங்களில காரியத்தைச் சாதித்துவிட்டு இறுமாப்புடன் செல்பவர்களைப் பார்த்து விடும் ஏக்கப்பெருமூச்சுகளுக்கும் குறைவில்லே.

அப்பால் உள்ள 'பொண்ட்' கையொப்பமிடும் வரிசையில் என்ன நடக்கிறது. என்று பார்ப்போமா?

அந்த வரிசையில் 'இடம்' நல்லவிலேபோகிறது.

முதல்நாள் இரவுமுதல் மறுநாள காலே 7, 8 மணி வரை அங்கு வரிசையாக நித்திரை செய்பவர்கள், காலேயில் தேவையானவர்கள் வந்ததும் இடங்களை விலேபேசி விற்றுவிட்டுப் போய்விடுகிருர்கள்.

பிஸினஸ் 'ஓஹோ' என்று நடக்கிறது.

ஒருநாளைக்கு 00பேர் தான் சர்வதேச பாஸ்போர்ட்டுக்குப் பிணைக்(பொண்ட்) கையெழுத்துப்போடலாம் என்ற அதிகாரிகள் கட்டுப்பாடும் நடைமுறையினுல் பிஸ்னஸ்' எப்படிப் போகிறது பாருங்கள்.

ஈழு-காணு

## எழிலார்ந்த நல்லூரில் என்றும் நிறைபவனே

இறைவன் திருக்குமரா
இன்தமிழ்க் கதிர்வேலா
குறைகள் களைபவனே
குணக்குன்றே கதிரேசா
நிறைவான வாழ்வுதரும்
நிர்மலனே குமரேசா
மறைகாத்த அழகேசா
மதிரூப மாமணியே

சந்தன மனங்கமழச்
சங்கொலிகள் நாதமிட
கந்தனே நான்பாடிக்
கற்பூர ஒளியேற்ற
வந்தென் பவம்ஓட
வண்ணமயில் மீதேறிச்
சிந்தைகுடி கொள்ளாயோ
செந்தூர் வடிவேலே

இறைதந்த அழகுமணி
என் அன்புத் தெய்வமணி
குறைபோக்கி ஆளுமணி
குன்றேறி நின்றமணி
நறுந்தேன் சுவைதங்கு
நற்றமிழ்க் கனகமணி
குறைபோக்க முனிவர்கள்
கும்பிடநி றைந்தமணி

புகழ்பூத்த சற்குருவே
பொற்சேவற் கொடியோனே
அழகான மஞ்ஞையில்
அவனியைச் சுற்றியோய்
பழமொன்று கிட்டாத
பழமேநீ ஆனவா
எழிலார்ந்த நல்லூரில்
என்றும் நிறைபவனே

★ இன்று நல்லூர் 11ம் திருவிழா — முல்லேக்கவி.

## ஐலண்ட் நிருபருக்கு 'அமிர்' பேட்டி

# 'சென்னையில் தொடர்ச்சியாக ஒருமாதம்கூட நான் இருக்கவில்லை!'

கேள்வி: நீங்கள் இந்தியாவில் தங்கியிருந்ததும், அங்கிருந்து கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுத்ததும் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கு உதவிபுரியவில்லையென அரசுத்தலைவர்கள் கூறுகிறார்கள், அதேசமயம் யாழ்ப்பாணத்திலும் கூட ஒரு பகுதியினர் நீங்கள் இந்தியாவில் தங்கியிருந்ததுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். எனவே நீங்கள் இந்தியாவில் நீடித்த காலம் தங்கியிருந்தது தவறு என்று கருதுகிறீர்களா?

அமிர்: நாங்கள் சென்னையிலிருந்துகொண்டே செயல்படவில்லை. கடந்தவருடம் முழுவதும் எம்மில் எல்லாருமே சென்னையில் தங்கியிருக்கவில்லை. நாங்கள் சென்னையில் இருந்துகொண்டுதான் செயல்படுகிறோம் என்ற ஒரு அபிப்பிராயத்தை உருவாக்க அரசாங்கம் முயல்கின்றது. இங்கு நடக்கும் சம்பவங்கள் பற்றி நான் அறிக்கைகள் விடுவதை அரசு விரும்பவில்லை. ஏனென்றால் அமைச்சர்கள் விடும் அறிக்கைகளுக்கு எனது அறிக்கைகள் மாறாக இருக்கின்றன. சென்னையிலிருந்தே அவ்வறிக்கைகளைவிடுவது வசதியாய் இருந்தது. ஏனென்றால் இங்கு அவைகளை விடுப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். நாம் சென்னையில் தற்காலிகமாகத் தங்கியிருந்தமையைத் தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்பது சரியல்ல.

கேள்வி:- 'கூட்டணி உல்லாசப் பிரயாணிகள்' என்றும், நீங்கள் அங்கு சொகுசாக வாழ்க்கை நடத்தியதாகவும் உங்களின் உண்ணுவிரதத்தின் போது இளைஞர்கள் கிண்டல் செய்தார்களே?

பதில்:- 'கூட்டணி உல்லாசப் பயணிகள்' என்றவாறு யாரும் கிண்டல்செய்யவில்லை. சில இளைஞர்கள், தாங்கள் இங்கே துன்பம் அனுபவிக்கையில்நாம் சென்னையில் தங்கியிருந்ததாகவே கூறினார்கள். கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் வேறு கூட்டணித் தலைவர்களும் இங்கேயே தங்கியிருந்தார்கள் என்பதை திரு. எம். சிவசிதம்பரம் அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கடந்த வருடத்தை எடுத்துக்கொண்டீர்களானால், நான் சென்னையில் தொடர்ச்சியாக இருக்கவில்லை. நான் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அடிக்கடி இருந்துவந்துள்ளேன். கடந்த வருடம் கலவரங்களின் பின் ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி இந்தியாவுக்குச் சென்றேன். இந்தியத் தலைவர்களைச் சந்தித்ததன் பின்னர் இங்குள்ள நிலைமைகளை விளக்குவதற்காக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றேன். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நான் அடிக்கடி பறந்துகொண்டிருந்தேன். திரு, ஜி.பார்த்தசாரதியுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தோம். சென்னையில் தொடர்ச்சியாக ஒருமாத காலத்துக்குக்கூட நான் தங்கியிருந்ததில்லை. உல்லாச வாழ்வு வாழ்ந்தோம் என்பது பெருந்தவறு.

கே: கூட்டணி உறுப்பினர்கள் ஏன் இன்னமும் சென்னையில் தங்கியிருக்கிறார்கள்?

ப: பாதுகாப்பின் நிமித்தம் முன்னாள் யாழ்ப்பாணம் எம்.பியின் வீடுஎரிக்கப்பட்டது அவரும் அவர் மனைவியும் அற்புதமாக உயிர்தப்பினார்கள் முன்னாள் வவனியா எம்.பி தமது தோட்ட மேலாளர் தம் கண்முன்னாலேயே கொலை செய்யப்பட்டதைக் கண்டார்.

கே: உங்கள் உண்ணாவிரதத்தைத் தீவிரவாத இளைஞர்கள் குழப்பப்போகிறார்கள் என்பது பற்றி முன்கூட்டியே தகவல் கிடைத்திருந்ததா?

பதில்: ஆம். அப்படியானதொரு முயற்சி நடக்கப்போவதாக முதல்நாள் தகவல் கிடைத்திருந்தது. அதுபற்றி நாம் தேவையில்லாமல் கவலைப்படவில்லை. ஏனென்றால் சத்தியாக்கிரகிகள் தாக்குதல் எப்பகுதியிலிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். 5-30 மணியளவில் மூன்று குண்டுகள் வெடிக்கப்பட்டன. ஆனால் நாங்கள் திட்டமிட்டபடி குறித்த நேரத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தோம்.

கே: பாதுகாப்பு ரீதியில் நிலைமை சாதகமாக இல்லாமையால் ஜூன் 23ம் திகதி நடைபெறவிருந்த வட்டமேசைமகாநாட்டை ஒத்திப்போடும்படி கேட்டிருந்தீர்கள். அதேசமயம் நீங்கள் ஆரம்பித்த உண்ணாவிரதமும் பதற்றத்தை அதிகரிப்பதாகவே இருந்தது. இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: குறித்த வாரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை துன்பகரமான நினைவுகளை ஏற்படுத்துவதாயிருந்தது. இந்தக் குரூரநினைவுகளுடன் அரசாங்கத்தோடும் இதர சிங்களத் தலைவர்களோடும் பேச்சு நடத்துவது பொருத்தமில்லை என்று கருதினோம். அதனால் தான் மகாநாட்டை ஒத்திப்போடக் கேட்டோம். உண்ணாவிரதம் பதற்றத்தைக் கூட்டுவதற்காக ஆரம்பிக்கப்படவில்லை. நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்வதற்காகச் செய்யப்படும் காரியமாகும்இது இந்து-முஸ்லிம் கலவரங்களின் உச்சக் கட்டத்தில் மகாத்மாகாந்தி சத்தியாக்கிரகம் செய்தார், நவக்காளியை போன்ற நிலைமை இங்கில்லை. ஆனால் இந்தப் பிரச்னையின் மனிதத்துவ அம்சங்களை வன்முறையாளர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கு நாம் விரும்பினோம். உண்ணாவிரதம் மூலம் நாம் எம்மையே துன்பத்துக்குள்ளாக்கிக்கொள்வதின் மூலம் மற்றவர்களின் இதயத்தை தொடமுயல்கின்றோம் வன் செயல்கள் ஆரம்பமாகும் சந்தர்ப்பங்களும் இருக்கலாம் ஆனால் அதற்காக நாம் சாத்வீகத்தைப் பயன்படுத்துவதை கைவிடலாகாது.

1942ல் மகாத்மாகாந்தி 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைஆரம்பித்த போது பல தலைவாகள் கைதானதைத் தொடர்ந்து பெருமளவில் வன்செயல்கள் வெடித்தன. ஆனால் வன்செயல்கள் ஏற்படும் என்பதற்காக சாத்வீகப் போராட்டத்துக்கு அழைப்பு விடுவதற்குத் தவறுவதாயின் அது மேலும் அதிகரித்த வன்முறைக்கே இட்டுச்செல்லும்.

(தொடரும்)

**[தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தை கொழும்பு ஆங்கில தினசரியான 'த ஐலண்ட்' பத்திரிகையின் நிருபர் திரு. டி. பி. எஸ். ஜெயராஜ் அண்மையில் இன்றைய தமிழர் நிலைபற்றியும், கூட்டணியின் உண்ணாவிரதப் போராட்டம் பற்றியும் நீண்டதொரு பேட்டி எடுத்தார். அப் பேட்டி ஆகஸ்ட் 5ம் திகதியும் 6ம் திகதியும் அப் பத்திரிகையில் வெளிவந்தது. அதன் முக்கிய சில பகுதிகளை 'ஈழநாடு' வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.]**

## ஒரு வாரத்தில் விசாரணை முடிவு

(புதுடில்லி)

சென்னை விமானநிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணையில் எதிர்பாராத புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ்நாடு தலைமைச் செயலர் திரு. கே. சொக்கலிங்கம்ஒருவார காலத்தில் விசாரணை முடிவுகள் வெளியாகுமென்று தெரிவித்துள்ளார்.

## நேற்றைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப்பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். யாழ். பஸ் நிலையத்திலும் பொது மக்கள் நடமாட்டம் காணப்பட்டது.

திடீரென சுமார் 9-30 மணியளவில் யாழ். பஸ் நிலையந்துக்கு முன்னால் உள்ள தியேட்டர் ஒன்றிலிருந்து துப்பாக்கி வேட்டுகள் ஆகாயத்தை நோக்கித் தீர்க்கப்பட்டன. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அங்குமிங்குமாகச் சிதறி ஓடினர்.

பஸ்நிலையத்தில் நின்ற பஸ்கள் மற்றும் வாகனங்கள் இடத்தைவிட்டு வேகமாகப் புறப்பட்டன.

ஒற்றைக் கதவுகளில் திறக்கப்பட்டிருந்த சகல கடைகளும் இழுத்து மூடப்பட்டன.

பஸ் நிலையத்தில் எழுந்த துப்பாக்கி வெடிச் சத்தங்களைத் தொடர்ந்து பிரதான வீதிப் பக்கமாகவும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டனவாம்.

அப்பொழுதான் மேற்குறிப்பிட்டவர்களில் இறந்தும் காயமடைந்துமுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவரின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் பின்னர் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது. (மா)

### மரணமானார்கள்

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் அற்புதராஜா (15வயது-கனகராயன்குளம்) என்பவர் நேற்றுக்காலை மரணமானார்.

யாழ். மாநகர சபை களஞ்சியப்பொறுப்பாளரான பத்மநாதன் (39 வயது-கொக்குவில்) என்பவரும் மரணமடைந்துள்ளார். [மா]

## தினேஷ் வேலூர் பயணம்

# 'ஓ நெகட்டிவ்' இரத்தப் பிரிவு சிறுநீரகம் உடன் தேவை!

(யாழ்ப்பாணம்)

சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கு உட்படவுள்ள பதினொன்கு வயது செல்வன் தினேஷ் சோமசுந்தரத்துக்கு 'O' Negative இரத்தப்பிரிவைச் சேர்ந்த சிறுநீரகமே தேவைப்படுவதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

செல்வன் தினேஷ் இன்றிரவு விமானமூலம் வேலூர் பயணமாகின்றார். கடுமைமையான சிறுநீரகப்பாதிப்புக்குள்ளாகியுள்ள இவருக்கு வேலூர் மருத்துவமனையில் இன்னும் ஒருவார காலத்தினுள் மாற்றுச் சிறுநீரகமொன்று பொருத்தப்படவேண்டும்.

இவரின் நிலையறிந்து பல அனுதாபிகள் சிறுநீரகம் வழங்க முன்வந்திருப்பது தெரியவந்துள்ளது. 'O' -நெக்கடிவ் இரத்தப்பிரிவைச் சேர்ந்த சிறுநீரகமே தினேஷுக்குத் தேவைப்படுவதால் இப்பிரிவை உடைய சிறுநீரகத்தை தானஞ்செய்ய முன்வருவோர் லயன்ஸ் கழகத்தை சேர்ந்த டாக்டர் சபாரத்தினம் மூலமாக தினேஷ் குடும்பத்தவரைத் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சிறுநீரகததைதானஞ்செய்ய முன்வருவோருக்கு வேலூர் செல்வதற்கான பிரயாண, வைத்திய ஒழுங்குகள் அனைத்தும் செய்துகொடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## பல்கலைகழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோறும் சென்று நிதி, உடுபிடவை, உணவுப் பொருட்கள் சேகரிப்பதுடன், கடைகள், வர்த்தக நிலையங்களுக்கும் சென்று சேகரிக்கப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

நிவாரண உதவிப் பொருட்கள் சேகரிக்க வரும் பல்கலைக்கழக மாணவர்களை, அடையாளம் கண்டு தாராளமாக வழங்குமாறும் யாழ் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வடக்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தியத் தூதுவர் திரு. சத்வால் பிரதமர் இந்திராகாந்தியின் செய்தியை திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடம் கையளித்த சமயத்தில், அமைச்சரவை டில்லியில் கூடி, இலங்கைத் தமிழர்களின் பிரச்னை தீரஎடுக்கவேண்டிய அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்டை நாடொன்றில் ஒரு இனத்தவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதைப்பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்ற விஷயத்தில் அமைச்சரவையில் உடன்பாடுகாணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## கைதான இளைஞர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த வியாழக்கிழமை வல்வெட்டித்துறையில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டபின்னர், அகதிகளாயிருக்கும் அப்பகுதி மக்களைச் சந்தித்து உரையாடினார்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின் வீடுகளுக்கும் திரு. அமிர்தலிங்கம் சென்றார். அங்கிருந்த பெற்றோர்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்து, ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் அவசரத் தந்திகளை அனுப்பிவைத்தார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி வடபகுதி இணைப் பதிகாரியுடனும் இராணுவப் பகுதி தலைமை அதிகாரியுடனும் தொலைபேசியில் திரு. அமிர்தலிங்கம் நேற்றுமுன் தினம் தொடர்புகொண்டார்,

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் 15 வயதுக்குட்பட்டவர்கள் 48 மணித்தியாலங்களுக்குள்ளும், 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் இம்மாதம் 15ம் திகதி புதன்கிழமைக்குள்ளும் விடுதலைசெய்வதாக இராணுவ அதிகாரிகள் உறுதியளித்ததாகத் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகொண்டபோது மேற்குறிப்பிட்டபடி தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

பாதுகாப்பு அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு திரு. அமிர்தலிங்கத்துக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் அளித்த வாக்குறுதிப்படி 15 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் நாளை திங்கட்கிழமைக்குள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்று இளைஞர்களின் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள் எனத் தெரியவருகிறது. (மா)

## சுன்னாகம் பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள பிரதான வீதி நேற்றுக்காலை பொதுமக்கள் நடமாட்டத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

சுன்னாகம் சந்திகளில் ஆயுதப்படையினர் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்,

மேற்படி பொலிஸ்நிலையத்திலிருந்த சகல பொருட்களும் அப்புறப்படுத்தப் பட்டதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் நிலையம் மூடப்படலாமென்று கூறப்படுகிறது. (மா)

## கூடாரங்கள் கொள்ளை!

(மாவிட்டபுரம்)

கடந்த ஆண்டு ஜூலைக் கலவர அகதிகளுக்கென வழங்கப்பட்டிருந்த கூடாரங்கள் நடேஸ்வராக் கல்லூரியிலிருந்து நேற்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.